விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 13 புதன்கிழமை (29.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 254

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சீனா பக்கம் சாய்கின்ற இலங்கை

# இந்தியாவுக்கு எப்படி நட்பு நாடாகும்?

## கலைஞர் கருணாநிதி கேள்வி?



(சென்னை)

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் சீனாவின் தலையீடு அபிவிருத்தி என்ற போர்வையில் மூடி மறைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது இலங்கை அரசு இந்திய அரசுடனான உறவுகளை புறந்தள்ளி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை சீனாவுடன் மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய நிலையில் இலங்கை எப்படி இந்தியாவிற்கு நட்பு நாடாக இருக்க முடியும்? என தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி இந்திய மத்திய அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் நியமனம்



(கொழும்பு)

இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின்தலைவராக கலாநிதி நாலக கொடஹேவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியிலிருந்து திலக் கருணாரட்ன ஆகஸ்ட் 17-ம் திகதி ராஜினாமா செய்தமையை அடுத்தே இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பதியத்தலாவையில் நில அதிர்வு!

(கொழும்பு)

பதியத்தலாவை ரன்கிந்த குளத்திற்கு கிழக்கில் நேற்றிரவு 2.9 ரிச்டர் அளவிலான நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

எனினும் இந்த அதிர்வினால் சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாக அறிவிக்கப் படவில்லை. இதனால் அச்சமடையத் தேவையில்லை. இது சிறிய அதிர்வாகும். (20ஆம் பக்கம் பார்க்க)

## செங்கல்பட்டு முகாமிலிருந்து இலங்.தமிழர்கள் விடுதலை

(சென்னை)

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள 7 இலங்கைத் தமிழ் அகதிகளை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனால் இவர்களின் குடும்பத்தாரும், ஈழத்தமிழ் ஆதரவு அமைப்புக்களும், கட்சிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளன.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில், இலங்கைத் தமிழ் அகதிகளான பராபரன், தி.சதீஸ், வி.சதீஸ், சண்முகநாதன், சேகரன், விக்னேஸ்வரன், (20ஆம் பக்கம் பார்க்க)

## தகுதி தராதரத்தைப் பார்த்தே முதலமைச்சர்கள் நியமனம்

### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(இரத்தினபுரி)


தற்போது கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் மாகாண சபைகளுக்கு முதலமைச்சர்கள் விருப்பு வாக்குகளின் அடிப்படையில்நியமிக்கப்படமாட்டார்கள்எனவும், தகுதி தராதரத்தைப் பார்த்தே முதலமைச்சர்கள் நியமிக்கப்படுவர் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தகுதியானவர்களுக்கு தகுதியான இடங்களை வழங்குவது ஆளும் அரசாங்கத்தின் கொள்கை எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, இதனை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தி வந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்.இராணுவத்தினரை திருப்பி அனுப்புங்கள்!

### மத்திய அரசிடம் ஞானதேசிகன் வேண்டுகோள்



(சென்னை)

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் இராணுவ முகாமில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பி.எஸ்.ஞானதேசிகன் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, நட்பு நாடு என்பதால் இலங்கை இராணுவத்தினருக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும் என்று (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வீரர் ஆப்கானில் பலி

(காபூல்)


இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்க விமானப் படை வீரர் ஆப்கானிஸ்தானில் பலியாகியுள்ளார்.

சுரேஸ் என்.ஏ.க்ரவுஸ் என்ற விமானப்படை வீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பிளக்கொக் ரக ஹெலி கொப்டர் விபத்துக்குள்ளானதில் சுரேஸ் மற்றும் அவருடன் பயணம் செய்த 3 படையதிகாரிகள் உயிரிழந்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை அவமதிக்கும் வகையிலேயே இந்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள்!

### இராணுவப் பயிற்சி குறித்து சீமான் காட்டம்



(சென்னை)

இலங்கை இராணுவத்தினருக்கு இந்திய அரசு பயிற்சியளிக்கக் கூடாது என்று தமிழக முதல்வரும் அரசியல் கட்சித் தலைவர்களும் தெரிவித்த கடுமையான எதிர்ப்பை உதாசீனப்படுத்தும் வகையில் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சியளிப்பது தொடரும் என்று பாதுகாப்புத் துணை அமைச்சர் பள்ளம் ராஜு கூறியிருப்பது ஒட்டுமொத்த தமிழ் இனத்தையே அவமதிப்பதாகும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பூர்வீக குடிகளான தமிழர்களுக்கு அரசியல் சம உரிமை அளிக்காமல் அவர்களை இரண்டாம் தர குடி மக்களாகவே நடத்தி (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு நிதியுதவி

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஒன்பது பில்லியன் ரூபாய் நிதி உதவியை வழங்கத் தீர்மானித்துள்ளது.

மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த உதவி வழங்கப்பட உள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைக் கிளைப் பிரதிநிதி பெர்னாட் செவாஜ் (20ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயிகளின் கடன்களுக்கான மீள் அறவீடு இடை நிறுத்தம்

(கொழும்பு)

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி மூலம் வழங்கப்பட்ட கடன்களுக்கான மீள் கொடுப்பனவு பணம் அறவிடுவதை இடை நிறுத்துமாறு நிதியமைச்சுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளால் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த இன்று ஈரான் பயணம்



(தெஹறான்)

ஈரான் தலைநகர் தெஹறானில் இடம் பெறவுள்ள அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று ஈரான் செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெஹறானில் நாளை மற்றும் நாளை மறுதினம் அணிசேரா நாடுகளின் மாநாடு இடம் பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் 50 பேர் (20ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்.செல்ல முற்பட்ட 147 பேர் நேற்றும் கைது!

### அதில் 123 பேர் தமிழர்கள்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய செல்ல முற்பட்ட மேலும் 147 பேரை நேற்று 28ஆம் திகதி கைது செய்துள்ளதாக இலங்கைக் கடற்படையினரின் இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டுவேறுபடகுகளில்இவர்கள் பயணித்த போதே கைது செய்யப் பட்டுள்ளனர்.

ஜத்சமெனி என்ற படகில் சென்ற 66 பேரில் 64 தமிழர்களும் 2 சிங்களவர்களும் இருந்துள்ளனர்.

இந்தப்படகு பேருவளைப் பகுதியிலிருந்து 22 கடல் மைல் தொலைவில் வைத்து கைப்பற்றப் பட்டுள்ளது.

இதேவேளை, பாஞ்சாலி துவ 4 என்ற படகில் சென்ற 81 பேரில் 59 தமிழர் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஆலய வளாகத்தில் ஆர்ப்பாட்டத்திற்கு தடை

சிலாபம் முன்னேஸ்வரம் பத்திரகாளியம்மன் கோவில் வளாகத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 2ம் திகதி வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தக் கூடாதென சிலாபம் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. பொலிஸார் முன்வைத்த முறைப்பாடொன்றை பரிசீலித்த சிலாபம் மாவட்ட நீதிபதி ஜகத் கஹந்தகம நேற்று செவ்வாய்க் கிழமை இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இதேவேளை, மக்கள் தொடர்புஅமைச்சர் மேர்வின் சில்வா, முன்னேஸ்வரம் ஆலய மிருகபலி பூஜையை எதிர்த்து சத்தியாக்கிரகத் திலும் ஈடுபடப் போவதாக அறிவித்திருந் தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ந-11)

# முன்னேஸ்வரம் மிருகபலி நிகழ்வினை அரசியல் பிரச்சினையாக்க வேண்டாம்

## இந்துமா மன்றம் கோரிக்கை

சிலாபம் முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் இடம்பெறவுள்ள மிருக பலி நிகழ்வினை ஓர் அரசியல் பிரச்சினை யாகவோ மதத்துவேஷ நிலைமையை ஏற் படுத்துகின்ற நிலைமையாகவோ மாற்ற வேண்டாம். இந்தப் பிரச்சினைகளை கையா ளும் பொறுப்பை இந்துக்களிடமே விட்டு விடுங்கள் என அகில இலங்கை இந்து மா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இந்து மாமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இந்து ஆலயங்களில் மிருகப்பலி செய்ய வேண்டாம் எனக் காலத்துக்கு காலம் நாங் கள் வேண்டுகோள் விடுத்து வந்திருக்கின் றோம். இது எமது சமயத்திற்கு ஒவ்வாத, ஏற் றுக் கொள்ள முடியாத பாவச் செயல் எனச் சுட்டிக் காட்டி வந்திருக்கின்றோம்.

மனிதர்களுக்காக மிருகங்களையோ பட்சிகளையோ எந்த ஓர் உயிரினத்திற்கும் ஆலயத் திருத்தலத்திலோ சுற்றாடலிலோ கொடுமை செய்வதை அனுமதிக்க முடியாது.

சிலாபம் முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் வரும் செப்டம்பர் முதலாம் திகதி மிருகபலி நிகழ்வு இடம்பெற இருப்பதை யறிந்து வேதனைப்படுகின்றோம்.

அதனைச் செய்யவேண்டாமென ஆலய நிர்வாகத்தினரையும், பூசகர்களையும் வேண் டுகின்றோம். அதேநேரம் அரசியல்வாதிகளை யும், இந்து அல்லாத வேறு சமய குழுக்களை யும் இதில் தலையிட வேண்டாமென வேண்டு கின்றோம்.

மேலும் இதனை ஓர் அரசியல் பிரச்சினை யாகவோ, மதத்துவேஷ நிலைமையை ஏற்படுத்துகின்ற நிலைமையாகவோ மாற்ற வேண்டாம்.

இந்தப் பிரச்சினைகளை கையாளும் பொறுப்பை இந்துக்களிடமே விட்டுவிடுங் கள். வழிபாட்டுத் தலத்தில் சமூகம் சம்பந்தமான பிரச்சினைகள் அல்லது கேள்விகள் எழலாம்.

சமூக நம்பிக்கையின் அடிப்படையில் ஓர் நிகழ்வு இடம்பெறும் போது அதனை அந்தக் கண்ணோட்டத்தில் அணுகவேண்டும். அதே நேரத்தில் சமூக விடயங்கள் சமய நம்பிக்கை களுடன் கலக்கப்படக்கூடாது.

எமது சமயத்தின் புனிதமான கோட்பாடு களுக்கோ அல்லது வழிபாட்டுத் தலங்களின் புனிதத்திற்கோ அல்லது தெய்வீகத் தன் மைக்கோ எவரும் களங்கம் ஏற்படுத்தக் கூடாது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ந-8)


### சேல்ஸ்மென் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத் திற்கு O/L, A/L படித்த புடைவை வியா பாரம் பழக ஆர்வமுள்ள ஆண்கள் தேவை. (வயதானவர்களும் விரும்பத் தக்கது)

தொடர்பு:-
சிவகணேசன் றெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(மலாயன் கபே அருகில்) (307)


### தவறிவிட்டது

693292638V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத் திரம், வங்கி ATM அட்டை ஆகியவை யாழ்ப்பாணத்திற்கும் திருநெல்வேலிக் கும் இடையில் தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் தயவு செய்து 0777211222 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தரவும். (C-854)


### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை கிராமக் கோட்டில் ஒன்றேகால் பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர்

தொடர்புகளுக்கு:-
0779834845 (306)



### வீடும் காணியும் விற்பனைக்கு

சுண்டுக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகில் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0773072231
0773502647 (C-850)


### பெயர் மாற்றம்

சென்யூட்ஸ், இளவாலை எனும் விலாசத் தில் வசிக்கும் கமலநாதன் கரோலின் பிறில்டா ஆகிய நான் எனது பெயரை 28.08.2012 இலிருந்து காயத்திரி என பெயர் மாற்றம் செய்கின்றேன் என்பதை இலங்கை குடியரசு வாழ் மக்களுக்கு அறியத் தருகிறேன்.

(305) காயத்திரி




### தனுஸ் வேக்ஸ்சொப் அன் சேவிஸ் சென்ரர்

மோட்டார் சைக்கிள் திருத்தம், வயறிங், பெயின்ரிங் வேலைகளும் ஆட்டோ, மோட்டார் சைக்கிள் சேவிசும் (291)

95, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.: 021 4914625, 077 4191251, 077 2090482, 077 7293312
உரிமையாளர்: உதயகுமார் திலீபன் (அன்னாமலை)

ஞாயிற்றுக்கிழமையும் திறக்கப்படும்


## நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின் றன. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 29.08.2012 தொடக்கம் 10.09.2012 பி.ப. 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி : 11.09.2012 மு.ப. 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 11.09.2012 மு.ப. 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலை யைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/ செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு 2ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | மகாத்மாஜி வீதி கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 3560.00 | 500.00 | M10/C10 |
| 02 | முத்தட்டுமடம் குறுக்கு ஒழுங்கை கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 2530.00 | 500.00 | M10/C10 |
| 03 | பூங்கனிஞ்சோலை முன் வீதி கல்வியங்காடு கல்லிட்டுத் தாரிடல் | 2600.00 | 500.00 | M10/C10 |
| 04 | பாடசாலை முன் ஒழுங்கை கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 3070.00 | 500.00 | M10/C10 |
| 05 | அரியாலை கிழக்கு கடற்கரை வீதி அரியாலை கல்லிட்டுத் தாரிடல் | 10120.00 | 500.00 | M08/C09 |
| 06 | நாராயணா கோவில் வீதி கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 3320.00 | 500.00 | M10/C10 |
| 07 | பனிக்கர் வீதி திருநெல்வேலி கல்லிட்டுத் தாரிடல் | 2350.00 | 500.00 | M10/C10 |
| 08 | கைதடி எல்லை வளைவினை மீள நிர்மாணித்தல் | 10640.00 | 500.00 | M08/C09 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில். (C-851)

திரு. ப. வசந்தகுமார்,
தவிசாளர்.


### குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவைகள் (Parcel Service)

கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் (சவுதி அரேபியா, குவைத், துபாய், டோகா கட்டார், பாகிறின்) குறைந்த கட்டணத்தில் சேவைகள்.

Canada - 1 கிலோ - 2600
London - 1 கிலோ - 1500
} மூன்று நாட்களில் ஒப்படைக்கப்படும்.

Canada - 1 கிலோ - 600
London - 1 கிலோ - 500
} ஏழு நாட்களில் ஒப்படைக்கப்படும்.

உங்கள் உணவு, உடை, அலங்காரப் பொருட்கள் CD, VIDEO, ALBUM - போன்ற பொருட்களை அனுப்பி வைக்கலாம்.

**Rainbow Travels**

கிழமையில் ஏழுநாட்களும் திறந்திருக்கும்

30/2, Third Lane,
Power House Road, Jaffna.
021 221 9596 (C-853)



### Canadaவில் குடும்பத்துடன் குடியேறுவதற்கான Visa ஒழுங்குகள்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள் குறுகிய காலத்தில் Canada செல்வதற்கு ஒழுங்குகள் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படுகிறது. அத்துடன் Nurses, Accountant, BioMedical Science Diploma முடித்தவர்கள் ஆகியோருக்கு குடும்பமாக (Family Visa)

Canada Tourist Visa அரசாங்கத்தில் பதிவு செய்து இலங்கையில் எப் பாகத்திலும் சொந்த வியாபாரம் செய்பவர்கள், 4 மாதங்கள் நன்கு பேணப்பட்ட வங்கி கணக்கு உடையவர்களுக்கு Canada வுக்கு Tourist Visa ஒரு மாத காலத்திற்குள் பெற்றுத் தர ஆலோசனை வழங்கப்படும்.

Cyprus - நாட்டில் மேலதிக படிப்புக்கு செல்பவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் Visa ஒழுங்குகள். இவ்விசா மூலம் Paris, Swiss, Italy, Germany போன்ற நாடுகளுக்கு சென்று வரலாம். மொத்த செலவு 600,000 மட்டுமே.

**Rainbow Travels**

தொடர்புகள்
0778980652
0212219596

30/2, Third Lane,
Power House Road,
Jaffna. (C-853)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## புத்தாண்டு நினைவுகள்

ஒரு பத்திரிகை நிருபர்; புத்தாண்டு செய்தி வாங்குவதற்காக ஒரு பெரிய மனிதர் வீட்டிற்குப் போனார். ''பெரியவரே! இது மாதிரி புத்தாண்டு செய்தி பெற்றுக்கொண்டு செல்வதற்காக வந்திருக்கிறேன்'' என்றார்.

''சற்று இப்படி அமர்ந்து கொள்ளுங்கள். இதோ வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்து அறையினுள் நுழைந்தவர் சற்று தாமதமாகி, ஒரு பேப்பரோடு வெளியிலே வந்தார்.

"இதுதான் என்னுடைய புத்தாண்டு செய்தி... பத்திரிகையிலே பிரசுரித்துக் கொள்ளுங்கள்" என்று அதைக் கொடுத்தார்.

"மிகவும் நன்றி" என்று சொல்லி விட்டு அதை அவர் வாங்கிக் கொண்டு வெளியே வந்தார்... அந்த நிருபர்.

வரும் வழியிலே அதைப் பிரித்துப் பார்த்தார். அப்போதுதான் அவருக்கு ஒரு விடயம் புரிந்தது...

கடந்த வருடம் பிரசுரித்த அதே செய்தியை இந்த மனிதன் இப்போதும் தந்து விட்டுள்ளார். இவர் அதிகளவான ''பிரதிகள்'' எடுத்து வைத்துள்ளார் போலுள்ளது.

ஏன் சேர்? வருடம்தான் புதிதாக பிறக்கிறது; அதே மாதிரி கருத்தும் புதிதாகப் பிறக்கக்கூடாதா?

"சென்ற வருடக் கஷ்டம் எல்லாம் புதுவருடத்தோடு நீங்கட்டும். எதிர்கொள்ளப்போகும் புதுவருடம் மக்களுக்கு அனைத்து சௌகரியங்களையும் வாரி வழங்கட்டும்'' என்று கூறுவதே வழக்கமாகப் போய் விட்டது.

"கஷ்டம்" என்பதை "வருடம்" நமக்கு கொடுப்பதில்லை சேர். நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வதுதான் கஷ்டம். அதற்கு வருடத்தை குறைசொல்லி என்ன பிரயோசனம்?

இவ்வுலகில் அளவுக்கு மீறிய ஆசைகள்தான் துன்பத்திற்கான அடிப்படைக்காரணமாகும்'' என்று எத்தனையோ அறிஞர்கள் எத்தனையோ தடவை சொல்லியுள்ளார்கள்.

இதை விளக்கி வைப்பதற்கு ஸ்ரீராமகிருஷ்ணரும் ஒரு கதையைச் சொல்லியுள்ளார்.

ஒரு நாடோடி... களைத்துப்போய் ஒரு மரத்தடியின் நிழலிலே உட்கார்ந்திருந்தான். காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது.

"ஆகா... இப்போது ஒரு நல்ல தூங்கும் இடம் இருந்தால் எவ்வளவு சுகமாகத் தூங்குவேன்" என்று நினைத்தான். அவன் நினைத்து முடியும் தறுவாயில் ஒரு ஆச்சரியம் அவனுக்காகக் காத்துக் கிடந்தது. அழகான பஞ்சனையொன்று அவன் அருகே இருந்தது... இது எப்படி நிகழ்ந்தது?

அவன் ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருக்கானே– அந்த மரம் கற்பக மரம். கேட்பதெல்லாம் கொடுக்கும். நினைப்பதையெல்லாம் கொடுக்கும் சக்தி அதற்கு உண்டு.

உடனே அவன் அதிலே படுத்துறங்கினான். சுகமாக இருந்தது.

சற்று நேரம் சென்ற பின்னர்; அவன் நினைத்தான்... "உடம்பெல்லாம் ஒரே வலியாக இருக்கிறதே... கை, கால்களை இரண்டு பேர் பிடித்து விட்டால் எவ்வளவு நலமாக இருக்கும்" என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது இரண்டு பேர் கை, கால்களை பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அடுத்ததாக அவனது வயிறு பசியெடுக்க ஆரம்பித்தது. "அறுசுவை உணவு கிடைத்தால் எவ்வளவு நல்லதாக இருக்கும்?" என்று நினைத்தான்.

அடுத்த விநாடியே உணவு ரெடியாகியிருந்தது.

சும்மா விடுவானா? பக்குவமாக சாப்பிட்டு முடித்து விட்டு மறுபடியும் தூங்கினான்.

நினைப்பதெல்லாம் நடந்து கொண்டிருப்பதால் அவனுக்கு ஒரே குதூகலம். இனிமேல் அவனுக்குக் கிடைக்க வேண்டியது ஒன்றும் இருக்கவில்லை. அந்த அளவிற்கு அனைத்தும் நிறைவானது.

மனம் பூராகவும் குதூகலிக்கும் நேரத்திலே திடீரென ஒரு இடர் அவனை ஆட்கொண்டது.

"இப்போது இங்கே ஒரு புலி வந்து விட்டால் என்ன செய்வது? என்று யோசித்தான். கற்பக மரம் அல்லவா; கேட்டதை உடனே கொடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு காட்டுப்புலியையும் அவன் முன்னால் நிறுத்தியது. இவன் "ஆ" என்று சத்தமிடுவதற்கு முன்பே அது மேலே பாய்ந்து அடித்து விட்டு ஓடி விட்டது.

இப்படித்தான்... நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கும்!

அதனாலே நாம் நினைப்பதையெல்லாம் பிறக்கும் புதுவருடம் வாரி வழங்கும் என்று எதிர்பார்ப்பது தவறானதாகும்.

"இந்த வருடம் நான் இப்படி நடந்து கொள்வேன்" என்று நாம் தானே பிறக்கும் புதுவருடத்திற்கு வாக்குறுதி கொடுக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

ஆயிரம் பாடசாலை திட்டத்தில் தெரிவான

# பாடசாலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டும்

## யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வேலைத் திட்டங்கள் அனைத்தையும் பூர்த்திசெய்ய வேண்டும் என யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி எஸ். மோகனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனையின் கீழ் கல்வி அமைச்சு பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் ஆயிரம் ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 61 ஆரம்ப பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென ஒவ்வொரு பாடசாலைக்கும் 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று பிற்பகல் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயிரம் ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கடந்த மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் நாளை 30 ஆம் திகதிக்கு முன்னர் முடிவடைய வேண்டும். அவ்வாறு முடிவடையும் பட்சத்திலேயே அந்த வேலைத்திட்டத்திற்கான முற்பணம் வழங்கப்படும்.

இதனை பாடசாலை அதிபர்களும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும்புரிந்துகொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர், பிரதம கணக்காளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உயரதிகாரிகள், பிரதேச செயலர்கள் எனப் பலர் பங்கு கொண்டிருந்தனர். (அ-6)

# மஹோற்சவ பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு பத்திரகாளி அம்பிகா சமேத வீரபத்திரர் ஆலய மஹோற்சவப் பெருவிழா கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இதில் இன்றைய தினம் இரவு 8 மணிக்கு சப்பரமும் நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று மறுநாள் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத்திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது.

கடந்த காலங்களில் அலங்கார திருவிழாவாக நடைபெற்ற இவ்விழா இவ்வருடம் தொடக்கம் கொடியேற்ற மஹோற்சவமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.,இதற்கென புதிய தேர் பொதுமக்களின் உதவியுடன் அமைக்கப்பட்டு கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெள்ளோட்டம் விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(அ-3-29)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 75 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 80 | 90 |
| தக்காளி | 60 | 60 | 50 | 75 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 65 | 70 |
| கரட் | 130 | 120 | 90 | 150 |
| பூசணி | 35 | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 70 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 | 70 |
| பாகற்காய் | 70 | 70 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 90 | -- |
| பயற்றங்காய் | 70 | 60 | 90 | 35 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 120 | 70 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 30 | 120 | 100 | 60 |
| போஞ்சி | 100 | 110 | 110 | 100 |
| கத்தரித்தம்புள்ள | 70 | 60 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 08 | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 140 | 180 | 65-90 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20-25 | 30 | 20 | 20-25 |

# இராசி பலன்

29.08.2012
(ஆவணி 13, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 9.41 மணிவரை
உத்தராடம் முற்பகல் 7.10 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
பிரதோச விரதம், ஆவணி ஓணம்.

**மேடம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், செய்தொழிலில் மேன்மையுண்டு, பொருளாதார நிலை உயர்வடையும், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், பிறர் உதவியுண்டு.

**இடபம்** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரும் நாள், நட்பு வட்டம் விரிவடையும், மனக்குழப்பம் அகன்று மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், வழிபாடு மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** பேச்சில் நிதானம் தேவை, எதிலும் குறை கேட்கும் சூழ்நிலை உருவாகலாம், செலவுகள் குறைய விழிப்புணர்ச்சி தேவை, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகும், குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முனைவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**சிங்கம்** கனிவான தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் சிறப்படைவீர்கள், கடன்கள் வசூலாகலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்** செல்வநிலை உயர சிவனை வழிபட வேண்டிய நாள், நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், தாய் வழி ஆதரவு பெருகும், தொழில் விருத்தியுண்டு.

**விருச்சிகம்** பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், பாராட்டும் புகழும் கூடும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை பலப்படும்.

**தனுசு** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பித்த சம்பந்தமான நிலையுண்டு, வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், நடைபெறாது என நினைத்த காரியமொன்று நடைபெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்** இடமாற்றங்கள் பற்றிய சிந்தனைகள் தோன்றும், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், மாலை நேரம் மகிழ்ச்சிக்குரிய சம்பவமொன்று இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** அதிர்ஷ்டகரமான நாள், கூட்டு முயற்சி வெற்றி தரும், பணப்புழக்கமுண்டு, உறவினர் வருகையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வருட அரையாண்டில் 188 பேர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளனர்

## மனநல வைத்தியர் திருமதி முல்லை அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

பாலியல் பலாத்காரத்திற்குள்ளாகுபவர்கள் அதிகளவில் மனநிலை பாதிப்படைகின்றனர் எனவும் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் சுமார் 188 பேர் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் மனநல வைத்தியர் திருமதி முல்லை தெரிவித்துள்ளார்.

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் (சி.எச்.ஏ) ஏற்பாட்டில் நேற்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் அதன் யாழ்.மாவட்ட இணைப்பாளர் த.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்னும் கருப்பொருளில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு 395 பேரும் 2010 ஆம் ஆண்டு 320 பேரும் 2011 ஆம் ஆண்டு 191 பேரும் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தனர். கடந்த 2009, 2010 ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்ட போதும் கடந்த வருடம் அதாவது 2011 ஆம் ஆண்டு குறைவடைந்திருந்தது.

ஆனால், இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான காலப் பகுதியில் மட்டும் 188 பேர் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் 13 வயது தொடக்கம் 21 வயதிற்குட்பட்டவர்களாகவுள்ளனர்.

இது தவிர 30 வயதுக்கு மேற்பட்டவர்களும் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். மேலும் யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே அதிகளவானவர்கள் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதில் பெற்றோர்களினாலும் உறவினர்களினாலும் பலர் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாலியல் பலாத்காரத்திற்குள்ளானவர்கள் அதிகளவில் மனநிலை பாதிப்படைகின்றனர்.

இவர்களுக்கு போதியளவு ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். சமூகத்திற்கு உகந்தவர்களாக அவர்களை வாழ வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

குடும்பங்களில் ஏற்பட்ட பிரிவுகள் தாய், தந்தையன்ர இழந்த நிலையில் உறவினர்களுடன் வாழும் நிலை என்பவற்றால் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுவது அதிகரித்து வருகிறது.

அத்தோடு பெற்றோர்கள் மறுமணம் புரிவதனால் அவர்களின் பிள்ளைகள் தனித்து விடப்படுவதும் பெற்றோர்களினாலேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாகுவதும் அதிகரித்து வருகிறது.

எனவே, பாலியல் பலாத்காரத்திற்குள்ளாகுபவர்கள் மேலும் பாதிப்படையாது மனநிலையில் தாக்கம் ஏற்படாத வகையில் சமூகத்திற்கு உகந்தவர்களாக, சமூகம் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாக வாழ வைக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் உண்டு. குறிப்பாக சிறுவர், பெண்கள் விவகாரங்களுக்கான உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் கூடிய கவனம் எடுத்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாணவர்களுக்கான மாகாண மட்ட சமூக விஞ்ஞானப்போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு யா/இந்து மகளிர் கல்லூரியிலும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு வ/சைவப் பிரகாச மகளிர் கல்லூரியிலும் பரீட்சை மண்டபங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற தமிழ், ஆங்கில மொழி மூலமான மாணவர்கள் போட்டியில் தவறாது பங்குபற்றிக் கொள்ளுமாறு கேட்டுள்ளார். (அ-9)

## துர்நடத்தையில் ஈடுபட்ட சிறுவன் சீர்திருத்த பாடசாலையில் அனுமதி

(மிருசுவில்)

துர்நடத்தையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கொடிகாமப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இரு சிறுவர்களில் ஒருவர் சிறுவர் சீர்திருத்த பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் மற்றைய சிறுவர் மீது குற்றம் எதுவும் காணப்படாமையால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் மிருசுவிலில் நடைபெற்ற துர்நடத்தை சம்பவத்தின்போது இரு சிறுவர்களும் காணி உரிமையாளர்களால் பிடிக்கப்பட்டு தேங்காய் பிடுங்கியதாக குறிப்பிட்டுள்ளதுடன் மதுபோதை, புகைத்தல் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர் என்ற குற்றத்தில் நையப்புடைக்கப்பட்ட பின்னர் கொடிகாமப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸாரின் விசாரணையில் குறித்த சிறுவர்கள் தாம் இளநீர் பிடுங்கியதாக குறிப்பிட்டனர். மற்றும் ஏனைய குற்றங்களுடன் ஒரு சிறுவன் மட்டுமே தொடர்புடையவன் என பெற்றோரால் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அச்சிறுவன் சீர்திருத்தப் பாடசாலைக்கு பொலிஸாரால் அனுப்பப்பட்டான்.

மற்றைய சிறுவன் மீது குற்றம் எதுவும் காணப்படாமையால் பொலிஸாரினால் புத்திமதிகள் கூறப்பட்ட பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான். (அ-3-85)




## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நாயன்மார்கட்டு, செம்மணி வீதி, பாரதி சன சமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாயன்மார்கட்டு, அம்பாள் வீதி, அம்பாள் சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படும்.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை அரியாலை, பாரதிவீதி, சுஜா போட்டோ முன்புறத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாவலர் வீதி, கனகரட்ணம் மகாவித்தியாலய முன்புறத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)

## யாழ்.பொதுநூலகத்தின் மலசலகூடம் நிரம்பி வழிகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலகத்தின் மலசலகூடம் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மலசலகூடத்தின் குழிகள் நீண்ட நாட்களாக திறந்த நிலையில் காணப்படுவதாகவும் இதனால் அவ்விடத்தில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



அங்குள்ள அனைத்து மலசலகூடத்தின் கழிவுகளும் அங்குள்ள சிற்றுண்டிச்சாலைக்கு அருகிலுள்ள மலசலகூடத்தின் குழிகளையே சென்றடைகின்றது.

இதனால் மலசலகூடத்தின் குழி நிரம்பி கழிவுகள் குழியைவிட்டு வெளிவந்து அங்குள்ள பூங்கன்றுகளுக்கு பரவிய பின்னரே யாழ்.மாநகர சபையினர் வந்து கழிவகற்றும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் அங்கு வரும் அதிகாரிகள், நூலக வாசிகள், மாணவர்கள், ஊழியர்கள் என அனைவரும் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-4)

## மறவன்புலோ மக்களுக்கு தென்னங்கன்றுகள்

(தனங்கிளப்பு)

தென்னை அபிவிருத்தி சங்கத்தினால் தென்மராட்சி கிராம சேவகர் பகுதியில் உள்ள மறவன்புலோவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு தலா 5 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

இத்தென்னங்கன்றுகள் மறவன்புலோ தென்னை அபிவிருத்தி சங்கத்தினால் நேற்று செவ்வாய்க்கிழமை சங்கத்தின் தலைவர் அருள் தவராசா தலைமையில் வழங்கப்பட்டன.

யுத்தத்தினால் இப்பகுதியில் உள்ள தென்னை மரங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டன. இம்மக்களின் வாழ்வாதாரம் தென்னை மரங்கள் ஊடாகவே நடைபெற்றதனால் இவ்வாறு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக இத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

இதில் சங்கச் செயலாளர் கு.கருணாதேவி, கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சி.சிவாகுலன், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-3-37)

## திறந்த நிலையில் விற்பனையாகும் கித்துள் கட்டிகள்

(சாவகச்சேரி)

கீரிமலை சிவன் ஆலய வடக்கு பகுதியில் தென் இலங்கை வியாபாரிகள் கித்துள் கட்டிகள் உட்பட இனிப்பு பண்டங்கள் சிலவற்றை சுகாதாரமற்ற முறையில் திறந்த நிலையில் வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

அதில் தேங்காய் சிரட்டை வடிவில் உள்ள கித்துள்கட்டிகள் பொலித்தீனால் சுற்றப்படாது திறந்த நிலையில் விற்பனை செய்யப்படுவதால் தூசிகள் படிந்து சுகாதாரமற்ற முறையில் காணப்படுகிறது. எனவே, இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

## மாநகர சபையின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் இவ்வாண்டுக்கான எட்டாவது (ஓகஸ்ட் மாதி) மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் செயலாளர் திருமதி ரு.சத்தியானந்தன் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்டங்காய் நாடான இலங்கைக்கு மத்தியரசு பயந்து நடப்பது ஏன்?

## புரியாத புதிர் என்கிறார் கி.வீரமணி

(கொழும்பு)

**நீலகிரி மாவட்டம் வெலிங்டன் இராணுவப் பயிற்சி கல்லூரியில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதற்கு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி மத்திய அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் கடந்த 19 ஆம் திகதி முதல் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவது கண்டிக்கத்தக்கதாகும்.

சென்னை தாம்பரம் விமானப்படை நிலையத்தில் இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளிப்பதை எதிர்த்து தமிழ் நாட்டில் வலுவான குரல் கிளம்பியதையடுத்து தாம்பரத்திலிருந்து பெங்களூருக்குப் பயிற்சி அளிப்பதை மாற்றினர்.

அதுவே ஒரு தவறான முடிவாகும். ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த- கொன்று குவிக்க இருக்கிற ஒரு இராணுவத்துக்குப் பயிற்சியைத் தாம்பரத்தில் அளித்தால் என்ன? பெங்களூரில் அளித்தால் என்ன? இது ஓர் ஏமாற்று வேலைதான்.

ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதுபோல் மீண்டும் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு நீலகிரி மாவட்டம் வெலிங்டன் இராணுவக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றால் இதன் பொருள் என்ன?

தமிழ் நாடு அரசின் சார்பிலும் முக்கிய எதிர்க்கட்சிகள் சார்பிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வந்தும் மத்திய அரசு இப்படி நடந்து கொள்வது தமிழர்களின் உணர்வைக் கொச்சைப்படுத்துவதாகும்.

கடந்த 12 ஆம் திகதி அன்று சென்னையில் டெசோ சார்பில் நடைபெற்ற மாநாட்டிலும் இத்தகைய பயிற்சியை அளிக்கக்கூடாது என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஈழத் தமிழராக இருந்தாலும் சரி தமிழ்நாட்டுத் தமிழர்களாக இருந்தாலும் சரி அவர்களை அலட்சியப்படுத்தும் தன்மையில் நடந்து கொள்வதாகவே கருதுகிறோம்.

அந்த நோக்கம் தங்களுக்கு இல்லை என்பதை சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட முறையில் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ள மத்தியரசு கடமைப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையால் தாக்கப்படும் பிரச்சினையிலும் மத்திய அரசு பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை என்பதும் வெளிப்படை. சுண்டங்காய் நாடான இலங்கையிடம் இந்தியரசு ஏன் இப்படி நடந்து கொள்ளவேண்டும்? எந்தக்காரணத்துக்காக அப்படி நடந்து கொண்டாலும் சரி ஈழத்தமிழர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இலங்கைப் பயங்கரவாத அரசால் மேற்கொள்ளப்படும் வன்முறை நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் வகையில் இந்திய அரசு நடந்துகொண்டு வருவது உலகத் தமிழர்கள் மத்தியிலே புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்க வழிவகுக்கக்கூடியதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். (அ-2)

## பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதியின் அதிவிசேட வர்த்தமானி மூலம் யாழ்.மாவட்டத்திலுள்ள நெடுந்தீவு, ஊர்கா வற்றுறை, காரைநகர், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பிரதேச செயல கங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் அறிவித்துள்ளார்.

எனவே, இனிவரும் காலங்களில் மேற்படி பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளும் அரச நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோர் பிரதேச செயலாளர் எனப் பயன்படுத்துமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

## அலுக்கோசு பதவிக்கு நேர்முகப் பரீட்சை

மரண தண்டனையை நிறைவேற்றுபவர் அலுகோசு பதவி வெற்றிடத்தை நிரப்பவென நேற்றையதினம் நேர்முகப் பரீட்சை ஆரம்பமாகியது. இந்த பதவி வெற்றிடத்திற்கென விண்ணப்பித்த 178 பேரில் 169 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பி.டபிள்யு.கொடிப்பிலி தெரிவித்தார்.

3 வருடங்கள் வெற்றிடமாக காணப்படும் அலுகோசு பதவிக்கான நேர்முகப் பரீட்சை இன்று தொடக்கம் நான்கு நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

1976 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பதோடு இதுவரை 357 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சர்வதேச சீன வர்த்தக கைத்தொழில் கண்காட்சி

வருடந்தோறும் மிகப்பிரமாண்டமான முறையில் சீனாவில் நடைபெற்றுவரும் கைத்தொழில் வர்த்தக கண்காட்சி சீனாவின் கன்ரன் மாநிலத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ளது.

மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் சீனாவின் பொருளாதார மையங்களில் ஒன்றாக மேற்படி கன்ரன் மாநகர் விளங்குகின்றது. இலங்கையிலிருந்தும் பல்வேறு தொழில் முயற்சியாளர்கள் மேற்படி கண்காட்சிக்கு செல்வது வழக்கமாகும்.

கடந்த 1957 ஆம் ஆண்டு முதல் சீன நாட்டில் நடைபெற்றுவரும் இக்கண்காட்சி 122 ஆவது தடவையாக இடம்பெறுகின்றது.

உலகெங்கிலுமுள்ள பல இலட்சக்கணக்கான முதலீட்டாளர்கள், தொழிலதிபர்கள், கைத்தொழிலாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் பார்வையாளர்கள் கலந்து கொண்டு கைத்தொழில் மற்றும் வியாபார தகவல்களை பரிமாறிக்கொள்வதும் வர்த்தக நட்புறவினை வலுப்படுத்திக்கொள்ளவும் மேற்படி கண்காட்சி மிகப்பெரிய ஒரு இணைப்பாலமாக விளங்குகின்றது.

எனவே மேற்படி கைத்தொழில் கண்காட்சியினை பார்வையிட ஆர்வமுள்ளோர் இல 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்துடன் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்ற கணக்கு உதவியாளர் ஆ.விமல்ராஜ் அறிவித்துள்ளார். (அ-9)

## போலி நாணயத்தாள் அச்சிடும் நிலையம் பொலிஸாரால் முற்றுகை

### சந்தேக நபர்கள் நால்வர் கைது

(கொழும்பு)

வத்தளை, கொடதெனியாவ பகுதிகளில் ஆயிரம் ரூபா, 500 ரூபா, 100 ரூபா போலி நாணயத்தாள்களுடன் மற்றும் போலி நாணயத்தாள்கள் அச்சிடும் பல உபகரணங்களுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 500 ரூபா போலி நாணயத்தாள்கள் 72 உம் ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் ஏழும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வத்தளை, மகபோல பகுதியில் உள்ள கடையொன்றில் இருந்து 500 ரூபா நாணயத்தாள்கள் 12 மீட்கப்பட்டன.

சந்தேக நபரிடம் இருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் மற்றொரு சந்தேக நபரிடம் இருந்த ஆயிரம் ரூபா போலி நோட்டுக்கள் 4, ஐந்நூறு ரூபா போலி நோட்டுக்கள் 18 மற்றும் போலி நாணயத்தாள்கள் அச்சிடும் உபகரணங்கள் என்பன பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டன.

இவர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின்படி கொட்டுகொட, ஜாஎல பகுதியில் வைத்து 500 ரூபா போலி நோட்டுக்கள் 24, ஆயிரம் ரூபா போலி நோட்டுக்கள் 3, பிரிண்டர், கணனி, கடதாசி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை கொடதெனியாவ பகுதியில் வைத்து ஐந்நூறு ரூபா போலி நாணயத்தாள்கள் 18 உடன் சந்தேகநபர் ஒருவர் கைதாகியுள்ளார். போலி நாணயத்தாள் அச்சிடும் உபகரணங்கள் சந்தேக நபரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

கடுகெந்த பகுதியினூடாக சந்தேகத்திற்கிடமாக சென்ற மோட்டார் சைக்கிளொன்றை சோதனையிட்ட பொலிஸார் 18 போலி நாணயத்தாள்களை மீட்டனர். மேலதிக விசாரணையின் போது சந்தேக நபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி நாணயத்தாள்களை அச்சிடும் உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இங்கிருந்து ஸ்கான் பிரிண்டர், கணனி, ஏ4 கடதாசியில் அச்சிடப்பட்ட 2 ஆயிரம் ரூபா, ஆயிரம் ரூபா, 500 ரூபா, 100 ரூபா தாள்கள் 4 என்பனவும் மீட்கப்பட்டன. (அ-2)




## கல்யாண மாலை


| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 4<br>உயரம்:-6'<br>கி.பா:-49.25<br>தொழில்:-பொறியியலாளர்<br>அவுதிஸ்ரேலியா B/343 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ரோகினி 3<br>உயரம்: 5' 4"<br>கி.பா:-14.5<br>தொழில்:-Bsc விவசாய ஆசிரியை G/377 |
| பிறப்பு:- 1982 இந்து<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 4<br>உயரம்:-5'11"<br>கி.பா:-30.5, 12 இல் செவ்<br>தொழில்:-பொறியியலாளர்<br>அவுஸ்.P.R. B/357 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுஷம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா:-39.75, 4 இல் செவ்வாய்<br>தொழில்:-பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர் G/378 |
| பிறப்பு:-1982 R.C<br>நட்சத்திரம்:-மகம் 2<br>உயரம்:-5'6"<br>கி.பா:-29.75,<br>தொழில்:-Msc. சேவையர் B/340 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 1<br>உயரம்: 5'<br>கி.பா:- 12.25<br>தொழில்:-Bsc (Hons) உதவி விரிவுரையாளர் G/380 |
| பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கேட்டை 4<br>உயரம்:-5'7"<br>கி.பா:-38.25, 12 இல் செவ்வாய்<br>தொழில்:-நிர்வாக உத்தியோகத்தர் (தனியார்) B/350 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அச்சுவினி 4<br>உயரம்: 5'3"<br>கி.பா:- 74, 8 இல் செவ்<br>தொழில்:- கனடா P.R. G/381 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் அம்பாள் உள்வீதியுலாவை நிறைவு செய்து தேரில் எழுந்தருளச் செல்வதையும் அம்பாள் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிப்பதையும் பக்தர்களின் அங்கப் பிரதட்சணம், காவடி எடுத்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதையும் அம்பாளைத் தரிசிக்கச் சென்ற பக்த அடியார்களையும் படங்களில் காணலாம்.

# புத்தரின் எலும்பை வைத்து வாக்கு கேட்கிறது அரசு

## ஐ.தே.க. பொதுச் செயலாளர் கிண்டல்

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட புத்தரின் எலும்பை வைத்து அரசாங்கம் இம்முறை தேர்தல் பிரசாரம் செய்வதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றைய தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,.

அரசாங்கத்திற்கு தேர்தல் தொனிப்பொருள் ஒன்று இல்லாததால் புத்தரின் எலும் புகளை காட்டி மக்களிடம் வாக்கு பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசி யக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட புத்தரின் எலும்பு தேர்தல் நடைபெறும் மாகாணங்களில் மாத்திரம் கண்காட்சிக்கு வைக்கப்படுகிறது.

கடந்த தேர்தல்களில் யுத்த வெற்றியை தேர்தல் பிரசார தொனிப்பொருளாக கொண்ட அரசாங்கம் இம்முறை தொனிப்பொருளின்றி புத்தரின் எலும்பை பயன்படுத்துகிறது.

இதேவேளை, 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு கல்வி அதிகாரிகள் முழு பொறுப்பு கூற வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (அ-2)

# கடலட்டைகளை வைத்திருந்த மீனவர்களுக்கு அபராதம் விதிப்பு

வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காக வைத்திருந்த 525 கடலட்டைகளை யாழ்.நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்.குருநகர் மற்றும் ஆனைக்கோட்டை பகுதியை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மூவர் மேற்படி கடலட்டைகளை தங்கள் வசம் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு யாழ். நீரியல் வளத்துறை திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்பட்டது. கடலட்டைகளை நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டார். (அ-9)

# தொ.நு.உத்தியோகத்தர்களுக்கான விசேட செயலமர்வு நாளை

(பூந்தோட்டம்)



வவுனியா மாவட்டத்தில் வலுவிழந்தவர்களுக்கான அணுகும் வசதிகளை பொதுக்கட்டடங்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அதனை நடைமுறைப்படுத்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு விசேட செயலமர்வு ஒன்று நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு சமூகசேவைகள் அமைச்சின் வலுவிழந்தவர்களுக்கான தேசிய செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் நடைபெறவுள்ள இந்த அமர்வில் சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், வலுவிழந்தவர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் ஜெயமானே, செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திசவீரசிங்கம் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே, இச் செயலமர்வில் வவுனியா மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், நகரசபை, பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை,வீதி அபிவிருத்தி திணைக்களம், கட்டட திணைக்களம், கல்வித்திணைக்களம் மற்றும் பல்கலைக்கழகம் சார்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை தவறாது கலந்து கொண்டு அனைவருக்குமான அணுகும் வசதிகளை கொண்ட கட்டடங்களை அமைக்க உதவுமாறு மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.[illegible] அறிவித்துள்ளார். (அ-9-266)

# தெரிவுக்குழுவை இறப்பர் முத்திரையாக மாற்றும் தேவை கூட்டமைப்புக்கு உண்டு

## அகாஷியிடம் கூறினார் பசில்

இனப்பிரச்சினை தீர்வுக்கான சிறந்த செயற்பாடு நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்படுவது எனவும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கிடைக்கும் பரிந்துரைகள் நாட்டில் உள்ள அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியை சந்தித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்ற வேண்டுமாயின் தமது கோரிக்கைகளுக்காக இணங்க வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பதாகவும் அப்படியான தீர்வை பெற்றுகொடுக்க வேண்டுமாயின் தெரிவுக்குழு ஒன்று தேவைப்படாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவை வெறும் இறப்பர் முத்திரையாக மாற்றும் தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. இப்பிரச்சினைக்கு நீடித்த தீர்வை வழங்குவதற்காக மக்களின் சபையாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்கும் தேவை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறினாலும் நடைபெற்ற தோதல்களில் வடக்கு கிழக்கில் அந்த கட்சி போதிய வாக்குகளை பெற்றுக் கொள்ள முடியாது போனது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வீதிப்புனரமைப்புக்கு உவர் நீர் பயன்பாடு

## பயணிகள் விசனம்

(சிவநகர்)

பூநகரி-பரந்தன் பிரதான வீதிப்புனரமைப்பின் போது உவர்நீர் தெளிக்கப்படுவதால் அவை வாகனங்களையும் பழுதடையச் செய்யக்கூடிய அபாய நிலை உள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வீதியானது காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் குடமுறுட்டியில் இருந்து உவர் நீரை பெற்று இவ்வீதிக்கு தெளிக்கப்படுகிறது.

இவ்வாறு தெளிக்கப்படும் உவர்நீர் வாகனங்களை பழுதடையச் செய்வதோடு பயணிகளின் உடைகளையும் அழுக்காக்குகின்றது.

எனவே, உரிய தரப்பினர் இதனை கருத்திற் கொண்டு இவ்வீதி புனரமைப்பதற்கு நன்னீரை பயன்படுத்த ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- இந்திய கடற்படையினருக்கு இடையிலான பேச்சுவார்த்தை

(கொழும்ப)

இலங்கை மற்றும் இந்திய கடற்படையினருக்கு இடையிலான நான்கு நாட்கள் சந்திப்பு ஒன்று இடம் பெற்று வருகிறது.

இலங்கைக் கடற்படை தலைவர் ரியர் அட்மிரல் ஆரா டயஸ் தலைமையிலான குழுவினரும் இந்தியக் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் எம்.பி.முரளிதரன் தலைமையிலான பிரதிநிதிகளுக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெறுவதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து பேசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு நாடுகளின் கடற்படையினரதும் தொழில்சார் தகவல்களை பகிர்ந்து கொள்வது தொடர்பில் இதன்போது முக்கிய அவதானம் செலுத்தப்பட்டதாகக்கூறப்படுகிறது. (அ-2)

# இலங்கைக்கான கப்பல் டேர்பனில் தடுத்து வைப்பு

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான லங்கா மஹாபொல கப்பல் இன்னும் டேர்பன் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

இந்தக் கப்பல் டேர்பனில் நங்கூரமிட்டதற்கான கட்டணமான 81 ஆயிரம் டொலர்கள் செலுத்தப்படவில்லை என்பதாலும் உரிய தரம் பேணப்படாமையாலும் கடந்த மே மாதம் 17 ஆம் திகதி டேர்பன் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டது.

அதன் மாலுமிகள் கடந்த ஜூன் மாதம் நாடு திரும்பினர். எனினும் இந்த கப்பல் இன்னும் மீட்கப்படாதுள்ளது.

இதற்கிடையில் அரசாங்கத்தினால் இந்தக் கப்பல் தன்சானியாவுக்கு விற்பனை செய்யப்பட்டு விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுவரையில் இலங்கையின் கொடி பறக்கவிடப்பட்டிருந்த இந்தக் கப்பலில் தற்போது தன்சானியாவின் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

எனினும் இதுவரையில் இந்த கப்பல் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பிலான அறிவிப்புகளை அரசாங்கம் வெளியிடவில்லை.

இந்தக்கப்பலை கொழும்பில்உள்ள பிரபல நிறுவனம் ஒன்று பயன்படுத்தி வந்தது. இந்த நிறுவனத்தின் உரிமையாளர் ஜனாதிபதியின் முக்கிய அதிகாரி ஒருவரின் உறவினர் என்று தெரிவிக்கப்படுகிறது.(அ-2)

# சிறுவர்களுக்கான கடவுச்சீட்டில் காலம், கட்டணத்தில் அதிகரிப்பு

## குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

16 வயதிற்குட்பட்ட இலங்கை சிறுவர்களுக்கான கடவுச்சீட்டின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் மூன்று வருடங்களால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் முதலாம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டுக்கள் இந்த திட்டத்திற்குள் உட்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை புதிதாக வழங்கப்படவிருக்கும் கடவுச்சீட்டுகளுக்கான கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி சகல நாட்டிற்குமான கடவுச்சீட்டினை பெறுவதற்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் சாதாரண சேவைகளுக்காக ஆயிரத்து 500 ரூபாவும் செலுத்தப்பட வேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச்சீட்டினை பெறுவதற்கு ஆயிரத்து 500 ரூபாவும் செலுத்தப்பட வேண்டிய அதேவேளை சாதாரண சேவைகளுக்காக ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும் என அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

# ஊடகவியலாளர்களை மிரட்டிய கான்ஸ்டபிளுக்கு விளக்கமறியல்

(மன்னார்)

மன்னார் நீதிமன்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் 4 பேருக்கு கொலை மிரட்டல் விடுத்து வந்த மன்னார் பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மன்னார் நீதிமன்றத் தாக்குதல் தொடர்பாக செய்திகளை வெளியிட்டு வந்த 4 ஊடகவியலாளர்களுக்கு பல தரப்பிலிருந்தும் நேரடியாகக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேரடியாக கொலை மிரட்டல் விடுத்த மன்னார் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராக ஊடகவியலாளர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தநிலையில் இவர் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1521-ஒட்டோமான் இராணுவம் பெல்கிரேட் நகரைக் கைப்பற்றியது.

★ 1541-ஒட்டோமான் துருக்கியர் ஹங்கேரியின் தலைநகரைக் கைப்பற்றினர்.

★ 1655-வார்சா சுவீடனின் பத்தாம் சார்ல்ஸ் குஸ்டாவின் சிறு படைகளிடம் சரணடைந்தது.

★ 1658-புரொட்டஸ்தாந்து சீரமைப்பு யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக வண. டாக்டர் பால்டியஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1756-ரஷ்யாவின் இரண்டாம் பிரடெரிக் ஜேர்மனியின் சாக்சனியை முற்றுகையிட்டான்.

★ 1782-திருகோணமலை கோட்டையை பிரெஞ்சுக்காரர் பிரித்தானியரிடம் இருந்து மீளக் கைப்பற்றினர்.

★ 1825-பிரேசிலைத் தனிநாடாக போர்த்துக்கல் அறிவித்தது.

★ 1831-மைக்கேல் பரடே மின்காந்தத் தூண்டலைக் கண்டுபிடித்தார்.

★ 1842-நாஞ்சிங் உடன்படிக்கையின் படி முதலாம் அபின்போர் முடிவுக்கு வந்தது. ஹொங்கொங் ஐக்கிய இராச்சியத்தின் குடியேற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

★ 1882-தேர்வுத் துடுப்பாட்டத்தில் லண்டனில் அவுஸ்திரேலியா பிரித்தானியாவை 7 ஓட்டங்களால் தோற்கடித்தது. பின்னர் பிரபலமான ஆஷஸ் தொடர் ஆரம்பமாக இது வழிவகுத்தது.

★ 1885-கோட்லீப் டாயிம்லர் மோட்டார் சைக்கிளுக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1898-குட்இயர் கம்பனி ஆரம்பிக்கப் பட்டது.

★ 1907-கியூபெக் பாலம் அமைக்கப்படும் போது இடிந்து வீழ்ந்ததில் 75 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

★ 1910-ஜப்பானியர் கொரியாவின் பெயரை சோசென் என மாற்றினர்.

★ 1930-சென் கில்டா தீவுகளின் கடைசி குடிமக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு ஸ்கொட்லாந்தின் ஏனைய பகுதிகளுக்குக் குடியேற்றப்பட்டார்கள்.

★ 1944-60 ஆயிரம் சிலவாக்கியர் நாசிகளுக்கு எதிராகக் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

★ 1944-அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையில் அமைக்கப்பட்டது.

★ 1949-சோவியத் ஒன்றியம் ஜோ- 1 என்ற தனது முதலாவது அணுகுண்டு சோதனையை கசகஸ்தானில் நடத்தியது.

★ 1966- பீட்டில்ஸ் தமது கடைசி நிகழ்ச்சியை சான் பிரான்சிஸ்கோவில் நடத்தினார்.

★ 1991- சோவியத் உயர்பீடம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் முடக்கியது.

★ 1995-முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரின் ஐரிஸ் மோனா என்ற கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

★ 1996-நோர்வேயில் பயணிகள் விமானம் ஒன்று ஸ்பிட்ஸ் பேர்ஜன் என்ற தீவில் உள்ள மலையுடன் மோதியதில் 141 பேர் உயிரிழந்தனர்.

★ 1997-அல்ஜீரியாவில் ரைஸ் என்ற இடத்தில் 98 ஊர் மக்கள் இஸ்லாமியத் தீவிரவாதிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 2005-அமெரிக்காவின் லூசியானா முதல் புளோரிடா வரையான கரையோரப் பகுதிகளை சூறாவளி கத்ரீனா தாக்கியதில் ஆயிரத்து 836 பேர் கொல்லப்பட்டு $115 பில்லியன் சேதம் ஏற்பட்டது.

## பிறப்புக்கள்

★ 1632-ஜான் லாக், ஆங்கிலேயத் தத்துவவியலாளர் (இ.1704)

★ 1936-ஜான் மெக்கெய்ன், அமெரிக்க அரசியல்வாதி, 2008 குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர்.

★ 1958-மைக்கேல் ஜாக்சன், அமெரிக்கப் பாடகர் (இ.2009)

★ 1959-அகினேனி நாகார்ஜுனா, இந்திய நடிகர்.

★ 1977-விஷால், திரைப்பட நடிகர்.

## இறப்புகள்

★ 1976-காசி நஸ்ருஸ் இஸ்லாம், வங்காளக் கவிஞர் (பி.1899)

★ 2008-ஆர்வி, தமிழ் எழுத்தாளர் (பி.1919)

★ 2009-மாவை வரோதயன், ஈழத்து எழுத்தாளர்.

### மைக்கல் ஜாக்சன்



மைக்கல் ஜோசஃப் ஜாக்சன் ஓர் ஆபிரிக்க அமெரிக்க பொப் இசைப் பாடகர். புகழ்பெற்ற ஜாக்சன் இசைக்குடும்பத்தில் ஏழாம் பிள்ளை. 1971 இல் 11 வயது குழந்தையாக இருக்கும் பொழுது இவரின் நான்கு சகோதரர்களுடன் ஜாக்சன் 5 என்ற இசைக்குழுவில் சேர்ந்து புகழ் அடைந்தார். கிங் அஃப் பொப் (பொப் இசையின் மன்னர்) என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். இவரால் வெளியிட்ட இசைத் தொகுப்புகளில் ஐந்து உலகெங்கும் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டதாகும். 1982 இல் வெளிவந்த த்ரிலர் உலகில் பெருளமவில் விற்பனை செய்யப்பட்ட இசைத் தொகுப்புகளின் பட்டியலில் முதலாம் நிலையிலுள்ளது.

1980களின் ஆரம்பத்தில் பொப் இசை உலகில் புகழ் பெற்ற பாடகரானார். அமெரிக்காவில் முதலாக பல மக்கள் செல்வாக்குப் பெற்ற கறுப்பின இசைக்கலைஞரானார்.

ஜாக்சன் படைத்த ரோபாட், மூன்வாக் போன்ற நடன வகைகளும் பிரபலமானது. இவரின் நடனமாலும் இசையாலும் பல இசை வகைகள் தாக்கம் பெற்றன. பல சமூக சேவைகளுக்கு உலக முழுவதிலும் கச்சேரிகளை நடத்தி நிதியுதவி செய்துள்ளார்.

கடந்த 2009 ஜூன் 25 அன்று இவர் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள தனது வீட்டில் மாரடைப்பு காரணமாக இறந்தார். இதனை லொஸ் ஏஞ்சல்ஸ் தீயணைப்பு துறை கப்டன் இச்டீவ் ருடா உறுதிப்படுத்தினார். எனினும் அதிகாரபூர்வமாக இவரின் மரணத்துக்கான காரணம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திடம் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடையாது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசாங்கத்திடம் எந்தவொரு தேசிய பிரச்சினைக்கும் தீர்வு கிடையாது. மாறாக தேவையற்ற பிரச்சினைகளை ஊக்குவித்து அதில் தங்கி ஆட்சியை முன்னெடுக்கவே அரசு தொடர்ந்தும் முயற்சிக்கின்றது என குற்றம் சுமத்தியுள்ள ஐக்கிய தேசியக்கட்சி சர்வதேச நாடுகளுடனான உறவுகளைப் பாதுகாப்பதிலும் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய கட்சியின் பேச்சாளரும் எம்.பி.யுமான கயந்த கருணாதிலக கூறுகையில்,

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வெற்றி கொண்டு இராணுவம் நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தியது. ஆனால், இவ் வெற்றியை அரசியல் நலனுக்காக அரசாங்கம் தொடர்ந்தும் பயன்படுத்துகின்றது. தனது இயலாமையை மறைத்துக் கொள்ள யுத்த வெற்றியை பயன்படுத்தும் அரசை பொதுமக்கள் தற்போது இனங்கண்டுள்ளனர்.

விசாரணைக் குழுக்கள் ஊடாக நாட்டை ஏமாற்றிய காலமும் போய்விட்டது. கல்வித்துறை உட்பட பொதுமக்களின் அத்தியாவசிய அரச சேவைகள் அனைத்திலும் பிரச்சினைகள் மேலோங்கி இன்று வீதிப் போராட்டங்கள் அதிகரித்துள்ளன.

அதுமட்டுமன்றி சட்ட ஒழுங்குகள் மீறப்பட்டு மோசடிகளும் அநீதிகளுமே நாட்டில் மேலோங்கியுள்ளன. தேசிய நூதனசாலைகளில் உள்ள பாரம்பரிய பொருட்கள் கூட கொள்ளையிடப்படுகின்றன என்றார். (அ-2)

## நாகவரத நாராயணர் கோவில் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகவரத நாராயணர் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று கிருஸ்ண ஜெயந்தி தினமன்று தேர்த்திருவிழா நடைபெறும்.

மூன்றாம் திருவிழா அன்று மகாஜன சபைக் கலைஞர் வட்டத்தினர் வழங்கவுள்ள சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வு நடைபெறவுள்ளது.

திருவிழா நாட்களில் தினமும் இரவு வேளையில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கவிருக்கும் புராண நாடகங்கள் மேடையேறவுள்ளன. காத்தவராயன் சிந்துநடைக்கூத்து, அரிச்சந்திர மயான காண்டம், பூதத்தம்பி, பத்தநந்தனார், சத்தியவான் சாவித்திரி, கோவலன் கண்ணகி போன்ற நாடகங்களே ஆற்றுகை செய்யப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

## மர்மப் பொருள் வெடித்ததில் நபரொருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

குப்பை எரித்த வேளை அதற்குள் இருந்து மர்மப் பொருள் வெடித்ததில் நபரொருவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.45 மணியளவில் கிளிநொச்சி கனகாம்பிகை குளத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து தெரியவருவது, குறித்த வீட்டில் ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவன ஊழியர்களே வசித்து வந்தனர்.

அந்நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்களில் ஒருவர் குப்பை கொளுத்திவிட்டு சென்ற வேளை மற்றுமொரு ஊழியர் அதன் அருகில் சென்றபோது மர்மப் பொருள் வெடித்ததிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் சங்கானையைச் சேர்ந்த தி.யோகசீலன் (வயது 29) என்ற நபரே இரு காலிலும் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு திணைக்கள ஊழியர்களும் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர். மேற்குறித்த ஊழியர்கள் இவ் வீட்டிற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் வந்து வாடகைக்கு குடியமர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-3)

## கொள்ளை சம்பவத்தை ஊடகங்களுக்கு தெரிவித்த பொலிஸார் மீது விசாரணை

(கொழும்பு)

கொழும்பு நூதனசாலை கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிட்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அண்மையில் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்திய போது அவர் வழங்கிய தகவல்களை ஊடகங்களுக்கு கசியவிட்ட அதிகாரிகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹன தெரிவிக்கையில்,

தகவல் வெளியாகுமுன்னமே ஊடகங்கள் இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் பிரபல அரசியல்வாதி ஒருவர் இருப்பதாக தகவலை வெளியிட்டன. அதன்பின்னர் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் இந்தச் செய்திக்கு மறுப்புக்களை வெளியிட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மென்போக்கை கடைப்பிடிக்காமல் பயிற்சி வழங்குவதை நிறுத்துங்கள்

### மத்தியரசைக்கோருகிறார் கருணாநிதி

(சென்னை)

இலங்கை இராணுவத்துக்கு மத்திய அரசு பயிற்சி கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்று முன்னாள் தமிழக முதலமைச்சரும் தி.மு.க.தலைவருமான மு.கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி கொடுப்பது தமிழகத்தின் சார்பில் முறையிடும் போதெல்லாம் அந்த இராணுவ வீரர்களைத் திருப்பி அனுப்புவதும் சில நாட்களுக்குப் பின்னர் மீண்டும் பயிற்சி கொடுப்பதும் தொடர்கதையாக நீடிக்கிறதே? என ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்,

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் சம்பவத்தில் நடப்பதைப் போலத்தான் இந்தப் பிரச்சினையிலும் மத்திய அரசு நடந்து கொள்கிறது.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா பயிற்சியளிப்பது என்பதில் நாம் முறையிட்டால் உடனடியாக அவர்களை வேறு மாநிலத்திற்குத் திருப்பி அனுப்புவதும் பின்பு மீண்டும் பயிற்சியளிப்பதும் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது.

இந்தப்போக்கினை மத்திய அரசு இனியும் நீடிக்காமல் உடனடியாக இலங்கை அரசுடன் இந்தப்பயிற்சி குறித்தும் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் கடுமையாகப் பேசி தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அதில் கருணாநிதி கூறியுள்ளார். (அ-2)

## தமிழ் மக்களை திசை திருப்பும் முயற்சியில் சில அரசியல்வாதிகள்

### இடங்கொடுக்க வேண்டாம் என்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

தமிழ் மக்களை வேறு திசைக்கு திருப்பும் முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் இடம்கொடுக்கக்கூடாது என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


கிளிநொச்சியில் இருந்து எந்தவிதமான தடங்களும் இன்றி மின்சாரம் வழங்குதவற்கான ஏற்பாடுகள் இன்று முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீணான மின் பாவனையைத் தவிர்த்து பிள்ளைகளின் கல்விக்காக அதனை பயன்படுத்தி எதிர்காலத்தில் மாணவர்கள் பல்வேறு முறைகளில் சிறந்து விளங்க பெற்றோர்கள் பங்களிப்பு வழங்க வேண்டும்.

சில தமிழ் அரசியல்வாதிகள் அரசாங்கம் செய்யும் வேலைத்திட்டங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிடமும் விமர்சித்து வருகின்றனர்.

இவ்வாறு விமர்சிப்பதன் மூலம் தமிழ் மக்களை வேறு திசைக்கு திருப்புகின்ற நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளுக்கு தமிழ் மக்கள் இடம்கொடுக்கக்கூடாது.

நாடு முழுவதும் ஒளிபெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் மின்சாரம் வழங்கப்படுகின்றது. இந்த மின்சாரத்தின் ஊடாக மாணவர்களின் கல்வி முன்னேற்றம் அடைய வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (அ-2)





வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் கம்பனியின் 14 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கம்பனியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவருக்கு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படுவதையும் கலந்து கொண்ட பேருந்து உரிமையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

24

## துட்டகாமினிக்குப் பின்னர்



அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்ட ஆட்சியாளர்கள் காலத்து புத்தர்சிலை


கி.மு.145 - கி.மு.101 வரையிலான 44ஆண்டுகள் இலங்கையை எல்லாளன் ஆண்டுள்ளான். கி.மு. 101 இலிருந்து கி.மு.77 வரை துட்டகாமினி இலங்கையில் அரசோற்றினான். இருவரது படைகளிலும் சிங்களப் போர் வீரர்களும் தமிழ்ப்போர் வீரர்களும் இருந்துள்ளனர். உதாரணமாக உருகுணையின் இளவரசனான் திக்காபயன் எல்லாளனின் படையில் இருந்துள்ளான். அதேபோல் எல்லாளனின் படைத் 'தளபதிகளில் ஒருவரான மித்திரனின் மருமகன் நந்தமித்திரன் உருகுணைச் சேனையில் ஒரு தளபதியாக இருந்துள்ளான். 'எல்லாளன்- துட்டகாமினி யுத்தம் பற்றி தவறான கண்ணோட்டம் நீங்க வேண்டும். அன்று துட்டகாமினி மன்னன் தனது அரசை வியாபித்து சம்பிரதாய விழுமியங்களுக்கு அமைய செல்வாக்குப் பெற்றிருந்த பிரதான பௌத்த சமய மத்திய நிலையங்களைத் தனது அதிகாரத்துக்குக் கீழ் கொண்டு வருவதற்காகப் போரிட்டானே தவிர, இந்த யுத்தம் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் நடந்த இனவாத யுத்தமொன்றல்ல' என்பது லயனல் சரத்தின் கருத்தாகும்.

**துட்டகாமினிக்குப்பின்னர் சத்தாதீசன்**

மகாமன்னன் துட்டகாமினிக்குப் பின்னர். அவன் சகோதரன் சத்தா தீசன் அனுராதபுரத்தின் மன்னனாக முடிபுனைந்தான். அரச முடிக்கு உரிமையாளனான துட்டகாமினியின் மகன் சாலி என்பவன் அசோகமாலா என்ற சாதாரண பெண்ணைக் காதலித்து மணந்தமையால் சிம்மாசனத்துக்கு உரிமையற்றவன் என்பது மரபு வழி கூறப்படும் கதை. அதனால் சத்தா தீசன் அரசனாகி 18 ஆண்டுகள் இலங்கையை அரசாட்சி புரிந்தான். துட்டகாமினியால் ஆரம்பிக்கப்பட்ட ருவான் வெலிசாயாவை கட்டி நிறைவேற்றியவன் சத்தாதீசனாவான். இம்மகாதூபியின் யானைச் சிற்பங்கள் பொதிந்த சுவர்களை சத்தாதீசனே அமைத்தான். அத்துடன் ஒரு தடவை தீக்கிரையான லோகபாசாதாவை (ஆயிரங்கால் மண்டபம்) மீண்டும் அமைத்துக் கொடுத்தான். அத்தோடு அவன் தக்கிண விகாரை, கல்லகாலேன விகாரை, காலமீபா விகாரை, பெற்றினகவலி விகாரை முதலான விகாரைகளை அனுராதபுரத்திலிருந்து தீகவாவி வரை நிறுவினான். தீகவாவி விகாரையையும், சைத்தியத்தையும் இவனே கட்டுவித்தான்.

**சத்தாதீசனின் பின்னர்**

சத்தாதீசன் இறந்ததும் அவனது பிள்ளைகள் அரசவுரிமைக்காக சச்சரவுப்பட்டனர். சத்தா தீசனின் மூத்த புதல்வன் லஞ்சதீசன் உருகுணையில் யுவராஜாவாக இருந்தான். அவன் இருக்கத்தக்கதாக தூபராம விகாரைப் பிக்குகள் இரண்டாவது மகன் தூலத்தனன் என்பவனை அரசனாக பட்டாபிஷேகம் செய்தனர். மூத்தமகன் லஞ்சதீசன் உருகுணையிலிருந்து படையுடன் வந்து தனக்குரித்தான சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். தூலத்தனன் ஆக 40 நாட்களே அரசிருக்கையில் அமர்ந்திருக்க முடிந்தது. லஞ்சதீசன் கி.மு. 59 இலிருந்து கி.மு. 50 வரை ஒன்பது ஆண்டுகள் அரசனாக விளங்கினான். அவன் மரணமடைந்ததும் அவனுடைய தம்பி கல்லாடநாகன் முடிதரித்தான். அவன் கி.மு. 50 இலிருந்து கி.மு. 44 வரை ஆட்சிபுரிந்தான்.




சந்திர வட்டக்கல் -அநுராதபுர காலத்திற்குரியது

அவ்வேளை படைத்தளபதியாக விளங்கிய கம்பகாரத்தகன் மன்னனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியபோது, மன்னனின் இளைய சகோதரனான வட்டகாமினி (வலகம்பா) என்பவன் கம்பகாரத்தகனைக் கொன்று ஆட்சியுரிமையைப் பெற்றுக் கொண்டான்.

**வட்டகாமினி**

துட்டகாமினியின் பின்னர் அரச கட்டிலேறிய அரசர்களில் குறிப்பிடத் தக்கவன் வட்டகாமினிஆவான். சகோதரன் கல்லாமட நாகனின் புதல்வன் மகாசூலியை தன் தத்துப் பிள்ளையாக பொறுப்பேற்றதோடு, அக்குழந்தையின் தாய் அனலாதேவியைத் தன் பட்டத்து மகஷியாகவும் ஆக்கிக் கொண்டான். வட்டகாமினியின் ஆட்சிக் காலம் பிரச்சினைக்குரியதாக இருந்தது. உருகுணையின் குறுநில மன்னனாக இருந்த பிராமணன் திஸ்ஸன் என்பவன் பெருங்கலகம் ஒன்றை அரசனுக்கு எதிராகத் தூண்டிவிட்டான். அக்கால வேளையில் உத்திரபுரத்தைச்சேர்ந்த ஏழு தமிழ்ப் பிரதானிகள் தம் படைகளுடன் வந்து மாந்தையூடாக அனுராதபுரத்தை நோக்கிப் படையெடுத்தனர். இந்த ஏழு தமிழர்களைப் பாண்டியர்களாக வரலாற்றாசிரியர் குறிப்பர். மஹாவம்சத்தில் எவ்விடத்திலும் இவர்களைப் பாண்டியர்கள் என்று குறிப்பிடவில்லை. இலங்கையின் குறுநில மன்னர்கள் அனுராதபுர ஆட்சியை ஏற்காது கிளர்ச்சி செய்கின்ற நிகழ்ச்சிகள் இலங்கை வரலாற்றில் புதியனவன்று. தென்னிலங்கையில் உருகுணைத் திஸ்ஸன் கிளர்ந்தெழுந்த போது, வடக்கே ஏழு குறுநில மன்னர்கள் போர்க்கோலம் பூண்டனர். இவர்களோடு உருகுணைத் திஸ்ஸனும் சேர்ந்து கொண்டு ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு வட்டகாமினிக்கு ஓலை அனுப்பினர். நிலமையைப் புரிந்துகொண்ட வட்டகாமினி உருகுணைத் திஸ்ஸனோடு சமாதானம் செய்துகொண்டான். ஏழு குறுநில மன்னர்களின் படைகளைத் தடுத்து நிறுத்தி வெற்றி கொள்ளளில் அனுராதபுர ஆட்சியை திஸ்ஸனிடம் ஒப்படைப்பதாக ஒத்துக் கொண்டான். அதனை நம்பிய திஸ்ஸன் ஏழு தமிழ் மன்னர்களுடன் மோதித் தோல்வி அடைந்தான்.

புலகஸ்தன், பாகியான், பனையமாறன், பிளையமாறன், தாடிகன் முதலான ஏழு தமிழ்க் குறுநில மன்னர்கள் உருகுணை திஸ்ஸனை வெற்றி கொண்டபின் கொலம்பகால என்றவிடத்தில் வட்டகாமினியின் படையைச் சந்தித்தார்கள். அதில் தோல்வி கண்ட வட்டகாமினி தேர் ஒன்றில் ஏறி அரண்மனைக்கு முந்திச் சென்று தன்னிரு மனைவியாரான அனுலாதேவி, சோமாதேவி ஆகிய இருவரையும் மகாசூலி மகாநாகன், சோரநாகன் ஆகிய இரு புதல்வர்களையும் ஏற்றிக்கொண்டு, தித்தாராமை சமணப் பள்ளியைக் கடந்து வேகமாகப் பின்வாங்கி ஓடியபோது பௌத்த துறவியல்லாத சமண துறவியான கிரி என்பவன் "பெருங் கருஞ்சிங்கம் பயந்து ஓடுகிறது" எனக் கேலி செய்தான். "நான் மீண்டும் ஆட்சியில் அமரில் முதல் காரியமாக தித்தாராமைப்பள்ளி இருக்குமிடத்தில் ஒரு விகாரையைக் கட்டுவேன்" எனத் தீர்மானம் செய்தான் வட்டகாமினி. தமிழர் படை துரத்தி வந்ததால் தேரின் வேகத்தை அதிகரிக்கும் பொருட்டு, தேரின் பாரத்தைக் குறைப்பதற்காக, அவன் தனது இரண்டாவது மனைவி சோமாதேவியை தேரினின்றும் இடை நடுவில் இறக்கிவிட்டு, தப்பிஓடி வெசகிரிக் காட்டுக்குள் புகுந்தான். அங்கு குப்பிக்கலா விகாரையின் தேரர் மகாதிஸ்ஸ அவர்களுக்கு உணவும் அடைக்கலமும் தந்தார். அவ்வாறாகப் பதினான்கு ஆண்டுகள் வட்டகாமினி தன் குடும்பத்தினருடன் கரந்துறைந்தான்.



அநுராதபுரத்தை தலைநகராக்கொண்ட ஆட்சியாளர்காலத்துக்குரியவை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களை இல்லாதொழிப்போம்

கடந்த வாரத் தொடர்ச்சி.......

✧ **கவலையுணர்வு**

ஏனையவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பிள்ளைகளைக் குற்றம் சாட்டும் போதும் அவர்கள் கூறுவதை நம்பாத போதும் பாடசாலை மற்றும் ஏனைய இடங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் போதும் தாங்க முடியாத கவலையுணர்வு ஏற்படும்.

✧ **வெட்க உணர்வு**

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட பிள்ளை மீது ஏனையவர்கள் குற்றம் சாட்டும்போது வெட்கவுணர்வு ஏற்படும். அது மட்டுமன்றி தான் கன்னித் தன்மையை இழந்து விட்டேன், அசுத்தமாக்கப்பட்டு விட்டேன், ஏனைய சிறுவர்களை விட நான் வித்தியாசமானவர் என்ற ரீதியில் எண்ணுவதால் கடுமையான வெட்கவுணர்வு ஏற்படும்.

✧ **பயம்**

தான் மீண்டும் மீண்டும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படலாம் என்ற அச்சம் காணப்படும். துஷ்பிரயோகியின் அச்சுறுத்தலினால் தனக்கும் தனது குடும்பத்திற்கும் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு விடுமோ என்ற பயம் காணப்படும். இச்சம்பவம் வெளியே தெரிந்தால் தனக்கு என்ன நடக்குமோ என்ற பயம். பொலிஸ், வைத்தியசாலை, நீதிமன்றங்களுக்குச் செல்வதற்குப் பயம் போன்றன காணப்படும். மேலும் தான் இச்சம்பவத்தை வெளியில் சொல்லும் போது ஏனையவர்கள் தன்னை நம்பமாட்டார்கள் என்ற பயம் போன்றன இவர்களிடம் காணப்படும். இவற்றின் காரணமாகவே பல சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் நீண்ட காலமாக வெளியே தெரியாமல் இடம்பெறுகின்றன.

**நீண்ட கால உள ரீதியான பாதிப்புக்கள்**

✧ **பிறர் மேல் நம்பிக்கையின்மை**

தான் நம்பிக்கை வைத்திருந்த நபரினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் போது அது அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழக்கச் செய்வதோடு ஏனையவர்கள் மேல் சிறுவர் வைத்திருந்த நம்பிக்கையையும் இழக்கச் செய்கின்றது. இது ஆளிடை உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது எதிர்காலத்தில் நல்ல நட்பை ஏற்படுத்திக் கொள்ள முடியாமை, தனது கணவன் அல்லது மனைவியிடம் நம்பிக்கையீனம் போன்றவற்றை ஏற்படுத்தும்.

✧ **குறைந்த சுயமதிப்பு**

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவர்கள் தாங்கள் ஊறுபடுத்தப்பட்டவர்கள், வித்தியாசமானவர்கள், நிராகரிக்கப்பட்டவர்கள் என எண்ணுவதனால் தாங்கள் மதிப்பற்றவர்கள் என எண்ணுகின்றனர். இதனால் இவர்களில் குறைந்த சுயமதிப்பு காணப்படும். இதனால் தமக்கு நியாயமாகக் கிடைக்கக் கூடிய உரிமைகளைக் கூட இவர்களால் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. எதிர்த்து நிற்றல் இவர்களுக்குக் கடினமானதொன்றாகக் காணப்படும்.

✧ **நாட்பட்ட பதகளிப்பு**

துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்கள் நீண்ட காலமாக ஆறாத, ஆழமான வடுவாகக் காணப்படும். இதனால் அச்சம்பவம் பற்றிய ஞாபகங்கள் ஏற்படும்போது பயம், அதிகரித்த இதயத் துடிப்பு, நடுக்கம், வியர்த்தல் போன்ற வெளிப்பாடுகள் ஏற்படும். இவற்றினால் பதகளிப்பு பதற்றம் (Anxiety) ஏற்படும். நீண்ட காலப் பாதிப்பாகத் தனது துணையுடனான பாலியல் உறவில் ஈடுபடுவதற்குக் கூட பயம், பதற்றம் என்பன தடையாக அமையும்.

**3. நடத்தை ரீதியான பாதிப்புகள்**

**குறுகிய கால நடத்தை ரீதியான பாதிப்புகள்**

✷ **படுக்கையில் சிறுநீர் கழித்தல்**

✷ **பாலியல் ரீதியிலான நடத்தைகள்**

ஏனைய சிறுவர்களுடனும் விளையாட்டுப் பொருட்களுடனும் தமது வயதிற்கு மீறிய பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல். பாலியல் விடயங்களில் அளவுக்கதிகமாக அக்கறை காட்டுதல், பாலியல் விடயங்கள் பற்றி உரையாடுதல் போன்றன இதிலடங்கும். மேலும் இவர்கள் தங்களின் பாலுறுப்புகளைக் கையாளல், அளவுக்கு அதிகமாகச் சுய இன்பம் பெறுதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுவர்.

✷ **வன்போக்கான நடத்தைகள்**

தமது நண்பர்கள் மீதும் வளர்ப்புப் பிராணிகளின் மீதும் ஆக்கிரமிப்பான நடத்தைகளில் ஈடுபடுவர். தமது கோபத்தை வெளிப்படுத்தச் செல்லப்பிராணிகளைக் காயப்படுத்துவர். இல்லையெனில் வீட்டிலுள்ள பொருட்களை உடைத்தல், எறிதல் போன்ற நடத்தைகளிலும் ஈடுபடுவர்.

✷ **பற்றிக் கொள்ளும் நடத்தை**

பாதுகாப்புக்காகத் தனக்கு நம்பிக்கையுள்ள ஒருவரோடோ அல்லது பெற்றோரோடோ தொங்கிக் கொண்டு திரிதல், அவர்களின் அன்பை கவனத்தைத் தமது பக்கம் ஈர்ப்பதற்கான நடத்தைகளில் ஈடுபடுவர்.

✷ **தனிமைப்படுத்தல்**

ஏனையவர்கள், குடும்பம், சமூகம் என்பவற்றிலிருந்து தம்மைத் தனிமைப்படுத்தி ஒதுங்கி வாழ்வர்.

✷ **பாடசாலை முன்னேற்றத்தில் வீழ்ச்சி**

குறித்த சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் காரணமாக அனுபவித்த உடல், உள ரீதியிலான பாதிப்புகளின் காரணமாகப் பாடசாலையின் கல்வி முன்னேற்றத்தில் பரீட்சைப் பெறுபேறுகளில் சடுதியான ஒரு வீழ்ச்சி ஏற்படும். பாடசாலை வரவு ஒழுங்கீனம், பாடசாலை இடை விலகல் என்பனவும் ஏற்படலாம்.

**நீண்ட கால நடத்தைப் பாதிப்புக்கள்**

✷ **பாலியல் வழி பிறழ்தலும் விபச்சாரமும்**

பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களில் சிலர் மீண்டும் சக வயதினரோடு அல்லது வயதில் குறைந்தவர்களோடு பாலியற் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காகப் பாலியல் நடத்தைகளில்

கு.கௌதமன்
மாவட்ட உள சமூக இணைப்பாளர்.
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.
யாழ். மாவட்ட செயலகம்.

ஈடுபடுவார்கள். சிறுவயதில் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுபவர்களில் பெரும்பாலானோர் வளர்ந்ததும் ஓரினச் சேர்க்கையாளராக மாறுகின்றார்கள் என உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்கள் சிறுமிகளாக இருக்கும் போது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும்போது எதிர்காலத்தில் அவர்களில் சிலரும் விபச்சாரிகளாக மாறுகின்றனர். சிறுவயதில் பாலியல் திருப்தியைப் பெற்றுக் கொண்டதாலும் தங்களது உடல் வர்த்தக ரீதியில் மதிப்புள்ளது என இவர்கள் கருதுவதாலும் இவ்வாறு விபச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

(புதன் வளரும்...)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஓமத்தீ அல்லது யாகத்தில் பயன்படும் மூலிகைகளின் மருத்துவ முக்கியத்துவம்

இந்துக்களின் பாரம்பரியமான யாகம் அல்லது ஓமத்தீ என்றழைக்கப்படும் சமயச் சடங்கா னது சுகாதாரமானதும் ஆரோக்கியமான துமான ஓர் நிகழ்வாகும். இச் சமயச் சடங்கு முக்கிய கோவில் விழாக்களிலும் பண்டிகைகளிலும் மக்கள் அதிகமாகக் கூடும் திருமணம், புதுமனை புகுதல், ஏனைய குடும்ப நிகழ் ச்சிகளிலும் நடைபெற்று வருகின்றது. இதனால்,

1. காற்று மண்டலத்தை தூய்மைப்படுத்தல்
2. நோய்க் கிருமிகளை நாசம் செய்து நோய்கள் பரவாமல் தடுத்தல்
3. விஷத் தன்மை வாய்ந்த வாயுக்களை முறித்தல்
4. மூலிகைகளின் புகை, தூய்மை அடைந்த காற்று சிற்சில சாதாரண நோய்கள் குணமடைவதற்கும் உடல் நலம் கிட்டுவதற்கும் உதவுகிறது. யாகத்தில் பயன்படும் மூலிகைகளும் அவற்றின் பாகங்களும்

✧ அகில் -கட்டை
✧ சந்தனம் -கட்டை
✧ வேம்பு -கட்டை
✧ அரசு -பட்டை
✧ அத்தி -கட்டை
✧ நாவல் -பட்டை
✧ பாதிரி -பட்டை
✧ இத்தி -பட்டை
✧ பலாசு -பட்டை
✧ வெட்டிவேர்
✧ பூலாங்கிழங்கு-மட்ட நிலத்தண்டு
✧ வசுவாசி
✧ கோரை/முஸ்தக்காசு-வேர்க்கிழங்கு
✧ சாம்பிராணி-ரெசின் (சாம்பிராணி மரத்தின் ரெசின் குழாய்களின் சுரக்கும் பொருள்
✧ கர்ப்பூரம் -ரெசின்
✧ குங்கிலியம் -ரெசின்
✧ மஞ்சள் -மட்டநிலத்தண்டு
✧ மா -மாம்பட்டை
✧ குங்குமப்பூ -சூலகத்தண்டு
✧ தாமரைப்பூ - உலர்ந்த பூ இதழ்கள்
✧ எருக்கம்பூ -உலர்ந்த பூ இதழ்கள்
✧ நாகம்பூ -உலர்ந்த பூ மொட்டுக்கள்
✧ பட்டிப்பூ -உலர்ந்த பூ இதழ்கள்
✧ நந்தியாவட்டம் பூ- உலர்ந்த பூ இதழ்கள்
✧ கராம்பு -மொட்டு
✧ ஏலம் -உலர்கனி
✧ நவதானியங்கள்

**நாவல்பட்டை**- இதனால் வாயிற் பிறக்கும் நோய்களும் இருமல் முதலியனவும் குழந்தைகளுக்கு ஏற்படும் தோடம் நீங்கும்

**பாதிரிபட்டை**- இதனால் சுலாசாசய நோய்கள் குணமாகும். மூட்டுவலியும் குணமாகும்.

**அறுகம்கட்டை**- உடற்சூடு தணியும்.

**எருக்கம்பூ**- தலைப்பாரம், பீனிசம், நீர்க்




கோவை தீரும். சுவாசக் குழாய்களை விரிவாக்கி சுவாசத்தை இலகுவாக்கும்.


**ஏலக்காய்**-பித்தத்தை தணிக்கும்.

**வெட்டிவேர்- பூலாங்கிழங்கு**- கிருமித் தொற்றுக்களை அகற்றி தோல் வியாதிகளிலிருந்து பாதுகாக்கும்.

**சாம்பிராணி, கர்ப்பூரம்**- சுவாசக் குழாய்பாதை தூய்மையாக்கப்பட்டு சளி குறையும்.

**மஞ்சள்**-தலைப்பாரம், தலையில் நீர் கோர்த்தல் ஆகியவற்றை தணிப்பதோடு தோல் வியாதிகளையும் தடுக்கும்.

**குங்குமப்பூ**-இரத்தத்தை சுத்திகரிக்கக் கூடியது.




**சந்தனம், அகில், வேம்பு**-முக்கியமாக கிருமிகளை நீக்கி இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை வாய்ந்தவை.

இதில் சேருகின்ற மூலிகைகளின் பாகங்களுக்கு பல்வேறு மருத்துவக் குணங்கள் உள்ள போதும் இவ் ஓமத்தீயில் இம் மூலிகைகளின் உலர்ந்த பகுதிகள் தீயில் இடப்பட்டு அதன் புகையாலேயே இவ் அரிய குணங்கள் கிடைக்கின்றன. ஒன்றை நாம் மனதில் உணர வேண்டும். வெளிப் பிரயோகமாக அதாவது மூலிகைப் புகையை நாம் சுவாசிப்பதாலும் எம் உடலின் மேல் படுவதாலும் இக்குணங்கள் எமக்கு கிடைத்தால் அவற்றை நாம் உட் பிரயோகமாக பயன்படுத்தும் போது எவ்வ




எவு மருத்துவ குணங்கள் உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களை நீக்கும் திறன் கொண்டதாக இருக்கும்.

இன்று நாம் நுளம்புகளை கட்டுப்படுத்தவும் சருமத்திற்கு பூசுவதற்கும் சென்ட் வகையாகவும் பல்வேறுவிதமான செயற்கை இரசாயன பொருட்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை பயன்படுத்துகிறோம். இப்படியான இயற்கை மூலிகைகளை பயன்படுத்தி சூழலையும் நமது உடலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் இம்முறைகள் அருகி அழிந்துபோகின்றன. அத்துடன் இப்படியான மூலிகைப் புகைகள் மூலம் விஷ

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

யந்துகள் கூட வீட்டை அணுகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். சில விஷ வாயுக்கள் சூழலில் பரவும் போது கூட இப்படியான மூலிகைகளின் புகைகள் இவ் விஷ வாயுக்களின் பாதிப்பிலிருந்து நமது உடலை பாதுகாத்துக் கொள்ள உதவும். அதாவது, ஓமத்தீயின் படிமங்கள் வீட்டின் ஒவ்வொரு பாகத்திலும் இருந்தால் விஷ வாயுக்களின் நச்சுத்தன்மை முறியடிக்கப்படும். எனவே, எமது உடலை தீங்கின்றி பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அடிக்கடி ஆஸ்துமா வியாதி வருபவர்கள், தோல் வியாதி வருபவர்கள் இப்படியான மூலிகைப்புகைகளை சுவாசிப்பதன் மூலமும் எமது உடலில் படிய விடுவதன் மூலமும் அத்தாக்கங்களில் இருந்து உடலையும் மனதையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். இவ் ஓமத்தீயில் குறிப்பிடப்பட்ட மூலிகையின் பாகங்களை தமிழ் மருந்துக்கடைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, பாரம் பரியமாகவோ சமயரீதியாகவோ வழி வந்த இம் முறைகளை, ஆரோக்கியத்தை மனதில் கொண்டாவது கடைப்பிடிப்பது இன்றைய சூழலில் அவசியமானதாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வைத்தியசாலைக்கு நோயாளர் விடுதி அமைப்பு

## இந்திய அரசு 200 மில்லியன் நிதியுதவி

வவுனியா பொது வைத்தியசாலையில் 200 படுக்கைகளைக் கொண்ட நோயாளர் விடுதியை அமைப்பதற்கு இந்தியா 200 மில்லியன் ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மானிய அடிப்படையில் இந்தத் தொகை வழங்கப்படுவதாக கூறப்படுகிறது.

வைத்தியசாலையின் உட்கட்டுமான வசதிகளை அதிகரிக்கவும் சிறந்த சிகிச்சைகளை வழங்கவும் நான்கு மாடிக் கட்டடமாக இந்த கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்திய அரசாங்கம் வடக்கில் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் போன்ற விடயங்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வீட்டுத்திட்டமும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கிழக்கு தேர்தலுக்காக அமைச்சு பதவியை துறக்க வேண்டியதில்லை

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சுப் பதவியை துறக்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பதவி விலகுமாறு கட்சியின் அதி உயர் பீடம் அழுத்தம் கொடுத்து வருவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை. கிழக்கு மாகாண தேர்தலுக்காக அமைச்சுப் பதவியை துறக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதே தமது நிலைப்பாடு.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிட்ட போதிலும் தாம் ஆளும் கட்சியிலேயே தொடர்ந்தும் அங்கம் வகித்து வருகிறோம்.

18 ஆம் திருத்தச்சட்ட மூல நிறைவேற்றம் உள்ளிட்ட முக்கிய சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சிக்கு விசுவாசமாக தாம் நடந்து கொண்டுள்ளோம்.

தேவையின்றி அரசாங்கத்திலிருந்து விலக வேண்டிய அவசியமில்லை. பசீர் சேகுதாவூத் பிரதி அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ள போதிலும் கட்சியின் வெற்றிக்காக தொர்டர்ந்தும் செயற்படுவார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் உள்ளிட்ட முக்கிய அரசாங்க பதவிகளில் பாதுகாப்பு தரப்பினர் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் இந்த நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கிக்கடன் வழங்க முடிவு

## பனை அபிவிருத்திச்சபை தெரிவிப்பு

பனை கைப்பணி பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்கல் முகாமையாளர் தெரிவித்தார்.

திவிநெகும திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்தி சபையினால் மருதங்கேணி, கைதடி, பண்டத்தரிப்பு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 63 பேர் பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர்.

இவர்களில் 44 பேருக்கு வங்கிக் கடன் வழங்குவதற்கு பனை அபிவிருத்தி சபை பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் பயிற்சி பெற்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவர்களுக்கான உபகரணங்கள் அடுத்த மாதம் வழங்கி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# திரைப்படங்களில் மது, புகைத்தல் காட்சிகள் காண்பிக்கப்படுவது தொடர்பில் பெரும் சர்ச்சை

(கொழும்பு)

புகைபிடிக்கும், மது அருந்தும் காட்சிகளை கொண்ட படமொன்று நாட்டின் திரையரங்குகளில் காட்டப்படுவது தொடர்பாக இலங்கை புற்றுநோய் சங்கம், தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகார சபையிடம் விளக்கம் கோரியுள்ளது.

தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகார சபை சட்டத்தின் 27 ஆவது சரத்து புகைபிடித்தல், மது அருந்தும் காட்சிகளை காட்சிப்படுத்துவதை தடை செய்கின்றது என புற்றுநோய் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சமதி ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்த சட்டத்தின் கீழ்தான் முதலில் புகைபிடிக்கும், மது அருந்தும் காட்சிகள் தொலைக்காட்சியில் தடை செய்யப்பட்டன. பின்னர் இந்த தடை நீக்கப்பட்டு இவ்வாறான காட்சிகளுடன் எச்சரிக்கை செய்திகளையும் காட்ட வேண்டுமென திருத்தம் செய்யப்பட்டது.

ஆயினும் திரைப்படங்களில் புகையிலை, மதுபான பாவனை காட்சிகளை இந்த சட்டம் தடைசெய்கின்றதா என்பது தெளிவாக இல்லையென வைத்தியர் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகார சபையின் தலைவர் வைத்தியர் கார்லோ பொன்சேகா இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளார்.

இலங்கையில் ஆண்டுதோறும் புகையிலை தொடர்பான நோய்களினால் 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். புற்றுநோய் கண்டுபிடிக்கும் சந்தர்ப்பங்களின் போது 80 சதவீதமானவை புகைபிடித்தலினால் உண்டாவதாக கூறப்பட்டுள்ளது. (அ-2)

# எண்ணெய்க்கசிவை கட்டுப்படுத்த 'பூம்' மறைப்பை பயன்படுத்த முடிவு

பாணந்துறையை அண்மித்த கடற்பரப்பில் மூழ்கிய கப்பலில் இருந்து எண்ணெய் கசிவதை கட்டுப்படுத்துவதற்காக பூம் எனப்படும் மறைப்பு ஒன்றை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ திணைக்களம் அறிவித்துள்ளது.

இக் கலந்துரையாடலில் பல்வேறு துறைகளை சேர்ந்தவர்கள் பங்குபற்றியதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அனில் பிறேமரத்ன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பூம் மறைப்பு மற்றும் அதனை கடலில் விரிப்பதற்கு தேவையான படகு வசதிகளை பெற்றுக்கொள்வதில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமையை கருத்திற்கொண்டு இராஜதந்திர மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை நடத்திய இந்தியாவிடமிருந்து அதற்கான வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# பலி பூஜை நடத்த வேண்டுமாயின் முதலில் என் கழுத்தை வெட்டுங்கள்

## இப்படிக்கூறுகிறார் மேர்வின்

(கொழும்பு)

பலிபூஜை நடத்த வேண்டுமாயின் முதலில் எனது கழுத்தை வெட்டுமாறு பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கபிலவஸ்து புனித பண்டம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் மிருக பலி பூஜைகளுக்கு இடமில்லை.

பலிபூஜைகளுக்கு மிருகங்களை பக்தர்கள் எடுத்துச் செல்லக்கூடாது. பலி பூஜைகளை தடுக்குமாறு பல அமைப்புக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த ஆண்டு நூற்றுக்கணக்கான மிருகங்களை நான் காப்பாற்றினேன். எனக்கு எந்த தேச சாபமும் கிடையாது. மக்களை ஏமாற்றிப் பிழைக்கக்கூடாது.

எனக்கு எதிராக தேங்காய் உடைத்து பல்வேறு நேர்த்திக் கடன்கள் செய்த போதிலும் எனக்கு எதுவும் நேரவில்லை. எந்த மதத்திலும் கடவுள் வணக்கத்திற்காக மிருகங்களை பலியிடுமாறு குறிப்பிடப்படவில்லை. எனக்கு தெரிந்த காளிதேவி இரத்தம் உறிஞ்சும் நபரல்ல என்றார். (அ-2)

# நுவரெலியாவில் கடும் பனிமூட்டம்

(நுவரெலியா)

நுவரெலியாவில் தற்போது கடும் பனிமூட்டத்துடனான வானிலை நிலவுவதாக மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி குறிப்பிட்டுள்ளார். சில சந்தர்ப்பங்களில் பிரதேசத்தை ஊடறுத்து பலத்த காற்று வீசுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நுவரெலியாவில் காலை மற்றும் மாலை வேளைகளில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக வாகன விபத்துக்கள் இடம்பெறுவதற்கான அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடும் பனி பொழியும் சந்தர்ப்பங்களில் வாகனங்களின் முற்புற மின்குமிழ்களை ஒளிரவிடுமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தல் விடுப்பதாக மாவட்ட செயலாளர் கூறினார். (அ-2)





வடமாகாண திட்டமிடல் அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண அமைச்சு திணைக்களத்தினால் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் நடைமுறைப் படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர் பான கலந்துரையாடல் நேற்றைய தினம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி உரையாற்றுவதையும் அருகில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், திட்டமிடல் செயலாளர் எஸ்.உமாகாந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்திய- இலங்கை உறவுகளில் ஏற்பட்டுள்ள இடைவெளியைக் குறைக்கின்ற முயற்சிகள் ஏதும் இப்போதைக்கு வெற்றிபெறுவதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தவில்லை. கடந்த 24 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தலைமையிலான மூன்று உறுப்பினர்கள் குழு புதுடெல்லிக்கு மேற்கொள்ளவிருந்து பயணம் இடைநிறுத்தப்பட்டதை இதற்கான ஒரு காரணமாக குறிப்பிடலாம்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட இந்தக் குழு, கடந்த 24 ஆம்திகதி புதுடெல்லி சென்று இந்திய அரசின் உயர் மட்டங்களுடன் பேசத் திட்டமிட்டிருந்தது. இந்தப் பயணத்திற்கான நிகழ்ச்சி நிரலை தயாரித்துக் கொடுத்ததும் இந்தியாவேதான். ஆனால், பின்னர் இந்தியாவே திடீரென இந்தப் பயணத்தை நிறுத்திவிட்டது. இதற்கு பின்னணிக் காரணம் இருப்பதாக தகவல்கள் கசிகின்றன.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகள் ஈடாட்டம் காண ஆரம்பித்தன. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று, சீனாவுடன் இலங்கை அதிக நெருக்கத்தை காட்டத் தொடங்கியது.

இருண்டாவது, இந்தியாவுக்கு உண்மையுடன் செயற்படத்தவறியது.



# சீனாவின் கைகளில் சிக்கியுள்ள கடிவாளம்



# அதிர்ச்சியடைகிறது இந்தியா...!

இந்த இரண்டு மையக் காரணங்களின் அடிப்படையில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறைந்துபோகத் தொடங்கின.

ஜெனீவாத் தீர்மானத்திற்கு முன்னரே உருவாகத் தொடங்கியிருந்த இந்த விரிசலை ஜெனீவாத் தீர்மானம் அப்பட்டமாகவே வெளிக்காட்டியது. ஜெனீவாத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டி ஏற்பட்டதற்கு இந்திய மத்திய அரசு ஒரு காரணத்தைக் கூறியது நினைவிருக்கலாம். தமிழ்நாட்டின் உணர்வுகளையும் மதிக்க வேண்டியுள்ளது என்பதே அது. தமிழ்நாட்டின் அழுத்தங்கள் இல்லாவிட்டாலும்கூட இந்தியா அந்த முடிவைத்தான் எடுத்திருக்கும் என்பதை இப்போது ஓரளவுக்கு புரிந்துகொள்ள முடிகிறது.

அதாவது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உறவுகள் கடுமையாகிப்போக தொடங்கியிருந்த நிலையில் அதை வெளிக் காட்டாமல், பூசி மெழுகிக் கொள்ள தமிழ்நாட்டின் அழுத்தங்கள் இந்திய மத்திய அரசுக்கு கை கொடுத்திருந்தது. ஆனால், ஜெனீவாத் தீர்மானத்தின் பின்னர் இந்த விரிசல் வெளிப்படையாகத் தோன்ற ஆரம்பித்தது. **இப்போது இந்த விரிசல் மெல்லமெல்ல ஒரு பனிப் போர் நிலையை நோக்கி நடைபோடத் தொடங்குகிறதா என்ற கேள்வியைக்கூட எழுப்பியுள்ளது.**

கொழும்பு நகர மையத்தில் காலி வீதியில் இருந்த காணியொன்றை கொள்வனவு செய்து கலாசார மையத்தை கட்டத் திட்டமிட்டிருந்தது இந்தியா. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது, அந்தக் காணியை சீனா கொத்திக்கொண்டு போனது.

அதுவும் பாகிஸ்தானுடன் இணைந்து போர் விமானங்களைத் தயாரிக்கும் சீனாவின் ஆயுத தளபாட நிறுவனம்தான் இந்தக் காணியை வாங்கியுள்ளது. இந்த நிறுவனம் இலங்கைக்கு கே-8 மற்றும் எவ்-7 ரக போர் விமானங்களை வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சீனாவுடனான இலங்கையின் நெருக்கம் அதிகமாகி வருவது இந்தியாவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதுவும் இந்திய தூதரகம் வாங்கவிருந்த காணி சீனாவுக்கு வழங்கப்பட்ட விவகாரம், அதிகாரபூர்வமாக இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கும் அளவிற்கு கொண்டுபோய் நிறுத்தியுள்ளது. இதை ஜெனீவாத் தீர்மானத்தை ஆதரித்ததற்கான பதிலடியாகவே இந்தியா கருதக்கூடும்; அப்படியே கருதுவதாகவும்தான் தெரிகிறது.

இதையடுத்[illegible] தலைமையிலான குழுவினரின் புதுடெல்லி சந்திப்புகளை இந்தியா இடைநிறுத்தியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதையாகவோ அல்லது உண்மையாகவோ இருக்கலாம். **எது உண்மையாக இருந்தாலும் இந்தியாவுடனான உறவுகள் சீராக இல்லை, சிறப்பாக இல்லை என்பது மட்டும் உறுதி.**

**இலங்கை கேட்டுக்கொண்டபடி கால அவகாசத்தை வழங்க வேண்டுமென்று இந்தியா கோரியிருந்தால், ஜெனீவாவில் தமக்கெதிரான தீர்மானமே வந்திருக்காது என்று அண்மையில் பேட்டியொன்றில் கூறியிருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.** ஜெனீவாத் தீர்மானம் என்பது அரசாங்கத்தை எந்தளவிற்கு பாதித்துள்ளது. இந்தியாவிடம் இருந்து தள்ளி நிற்க வைத்துள்ளது என்பதை உணர இந்த பேட்டி ஒரு உதாரணம்.

சீனாவிற்கு இலங்கை கொடுத்துவரும் முக்கியத்துவமும், தம்மை அலட்சியப்போக்கில் நடத்துவதும் இந்தியாவிற்கு கடுப்பேற்றியுள்ளது. இந்த சூழலில் அண்மைக் காலத்தில் இலங்கைக்குள் அடிக்கடி வந்துபோகும் சீன பாதுகாப்பு அதிகாரிகள் பற்றிய கவலையும் இந்தியாவுக்கு அதிகரித்துள்ளது.

இந்தியாவுக்கு அண்மையில் உள்ள நாடான இலங்கை, சீனாவின் செல்வாக்கிற்கு உட்படுவதை இந்தியா ஒரு போதும் விரும்பவுமில்லை விரும்பப் போவதுமில்லை. **இந்த நெருக்கத்தின் இன்னொரு கட்டமாக சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியூங் குவாங்லி இன்று புதன்கிழமை** கொழும்பு வருகிறார். **அத்துடன் 96 பேர் கொண்ட சீன உயர்மட்டக்குழு அடுத்த மாதம் கொழும்பு வர இருக்கிறது.** இதுவேறு இந்தியாவுக்கு சினப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவையெல்லாமே இந்தியாவுடனான உறவு மேலும் மேலும் விரிசலடைந்து போவதற்கு உதவியாக அமைந்துள்ளன. இவையெல்லாம் எதேச்சையாக நடக்கிறதா திட்ட ஒழுங்குப்படி நடக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனாலொன்று, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு நெருக்கமடைவதை இந்தியா எப்படி வெறுக்கிறதோ, அதே போலத்தான் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் கெட்டுப்போவதை சீனாவும் விரும்பும் போலத் தென்படுகிறது.

அம்பாந்தோட்டையில் மேலும் பெருமளவு நிதியுதவிகளை கொட்டுகிறது சீனா. அத்தோடு வடக்கு-கிழக்கில் இலங்கை இராணுவத்தினருக்கான வீடமைப்பிற்கு 100 மில்லியன் அமரிக்கடொலர் நிதியுதவியை வழங்கவுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இருநாடுகளுக்கும் இடையில் இலேசான விரிசல் தோன்ற ஆரம்பித்ததும், சீனா அதற்கேற்றவாறு காய்களை நகர்த்துகிறது. போலத் தென்படுகிறது.

வழக்கத்திற்கு மாறாக அதிகளவிலான சீன அதிகாரிகள் கொழும்புக்கு மேற்கொள்ளும் பயணங்கள் இதை உறுதி செய்கின்றன. இப்போது இந்திய-இலங்கை உறவுகளை சீர்ப்படுத்திக்கொள்வதற்கான கடிவாளம் கொழும்பிலும் புதுடெல்லியிலும் மட்டும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கடிவாளம் பெய்ஜிங்கிடமும்கூட சிக்கியிருப்பதாகவே தோன்றுகிறது.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிகன் தோன்றிய வரலாறு!

முதன்முதலில் 7 கிரகங்களே இருந்திருக்கின்றன என்று ஜோதிட வரலாறு கூறுகின்றது. வரிசைக் கிரமமாக சூரியன் (ஞாயிறு) முதல் சனி வரையில் உள்ள கிரகங்களுக்கேற்பவே ஞாயிறு முதல் சனி வரையில் நாட்களைப் பகிர்ந்தளித்திருக்கிறார்கள்.

பின்னால் வெகு காலத்திற்குப் பின்னர் இராகு, கேது கண்டு பிடிக்கப்புட்டார்கள். ஆகவே இவ்விருவர்களும் வார நாட்களில் இடம்பெற முடியவில்லை. ஆயினும் சப்த கிரகங்கள் நவக்கிரகங்களாகினர். இந்த நவக்கிரகங்களை அமைத்துத்தான் ஜாதகம் கணிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் நமது தமிழ் நாட்டின் தென் பாகத்தில் பிறந்தவர்களுக்குப் பெரும்பாலும் தச கிரகங்களைக் கொண்டுதான் ஜாதகம் கணிக்கப்படுகிறது. அதாவது குளிகன் என்னும் மாந்தியையும் சேர்த்து இதற்கு தசமுக இராவணனே காரணமென்று சிலர் சொல்வதுண்டு. என்ன ஆச்சரியம்!

நவக்கிரகங்களையே ஆட்டிப் படைத்த இராவணன் அவர்களுக்கு ஒரு சகோதரக் கோளை ஏன் உண்டாக்க வேண்டும்? அப்படி உண்டாக்கும் சக்தி அவனுக்கு எப்படி ஏற்பட்டதென்று வியக்கலாம் நாம். உண்மையில் இராவணன் குளிகனைத் தோற்றுவிக்கவில்லை. குளிகன் தோன்றுவதற்கு அவனை அறியாமலேயே அவன் ஒரு காரண புருஷனாக விளங்கினான் என்று சொல்கிறார்கள் புராணமறிந்தவர்கள்.

எல்லா வல்லமையும் பெற்ற இலங்கையரசன் இராவணன் ஒருமுறை நவக்கிரகங்களிடம் கோபம் கொண்டு அவர்களை இழுத்து வந்து தன் சிம்மாசனத்தில் ஒவ்வொரு படிக்கும் ஒரு கிரகம் வீதம் கட்டிப் போட்டு அவர்களை மிதித்துக் கொண்டு சிம்மாசனம் ஏறுவான் என்று சிலர் புராணக்கதை சொல்லுவார்கள்.

இந்தக் கிரகங்கள் இராவணனைக் கண்டால் நடு நடுங்கி சப்த நாடிகளும் ஒடுங்கி செயலற்றுப் போவார்களாம்! இருந்தும் அவனை இவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**இராவணனுக்கு ஓர் ஆசை!**

தனக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும். அவன் தன்னை விட வல்லமை மிகுந்தவனாகவும் யாராலும் ஆழிக்க முடியாத சக்தி பெற்று தீர்க்காயுள் உடையவனாகவும் இருக்க வேண்டும் என்பது அவனது விருப்பம்.

நாமே குழந்தை இல்லாதவர்களானால் எவ்வளவு செலவு செய்து பரிகார முறைகளை அனுஷ்டிக்கிறோம்.

குபேரப் பட்டினமான இலங்காபுரிக்கரசன் இராவணன். அதுவும் பரமசிவனுக்கு மிக வேண்டிய நண்பனான இராவணனுக்கு இத்தகைய மகன் பிறக்க வேண்டுமென்று ஆசையிருந்தால் சும்மா இருப்பானா? ஈசனிடமே வரம் பெற்றுவிட்டான்.

**மண்டோதரி (இராவணன் மனைவி)**

கருவுற்றாள் பார்த்தார்கள் நவக்கிரகங்கள்! இராவணனைக் கண்டாலே சிம்ம சொப்பனமாயிற்றே இவர்களுக்கு! அவனுக்கு ஒரு மகன்! அதுவும் சிவனுடைய வரத்தினால் பிறந்தால் நாம் என்ன கதி ஆவோம். சூரியன் முதல் கேது வரையிலுள்ள கிரகங்களின் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது.

குழந்தை பிறக்காமல் செய்ய இவர்களால் முடியாது. ஆனால் விரைவில் இறக்கச் செய்ய ஆயுட்காரகனாகிய சனி முயன்றால் முடியும். எனவே சனி இதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு இராவணனுக்குப் பிறக்கப் போகும் மகனின் ஆயுளைக் குறைத்து விரைவில் இறக்கச் செய்ய வேண்டும். இதுதான் இவர்களுடைய திட்டம்.

## ஜோதிடக் களம்

சனிக்கோ தனக்கிடப்பட்டுள்ள பொறுப்பைக் கேட்ட மாத்திரத்தில் வியர்வை கொட்டியது. உடலில் உண்டான வியர்வையைத் துடைத்துக் கொண்டே வந்தான். தேய்க்கும் போது மார்பில் அழுக்கு உண்டாகிக் கொண்டு வந்தது. அதனை நன்றாகச் சேர்த்து ஒரு குளிகை (மாத்திரை) போல் ஆக்கிவிட்டான்.

அந்தக் குளிகையை அப்படியே வைத்திருந்த நவக்கிரகங்கள் மண்டோதரியின் பிரசவ நேரத்தில் சிசுவின் சிரோதய காலத்தில் எங்கெங்கு நிற்க வேண்டுமோ அதன்படி நின்று விட்டார்கள்.

இராவணனுடைய மகன் இந்திரஜித் சிரோதய ஜெனன லக்னத்துக்கு எட்டாமிடமான ஆயுட் ஸ்தானத்தில் சனியின் கையில் வைத்திருந்த குளிகையை யாரும் அறியாமல் போட்டு விட்டார்கள் இவர்கள்!

அதனால் தான் இந்திரஜித்து பல ஜித்து வேலைகள் தெரிந்திருந்தும் மத்திய ஆயுளில் இறக்க நேர்ந்தது என்று ஒரு கதை உண்டு. அந்தக் குளிகன் தான் மாந்தி என்று அழைக்கப்படும் கோள்!

பத்துத்தலை இராவணன் காலத்தில் தான் இலங்கையில் நவகோள்கள் தச கோட்களாயின என்பதால் இலங்கையிலும் இலங்கையை அடுத்துள்ள பாரதத்தின் தென்பகுதிகளிலும் குளிகனையும் போட்டுத்தான் ஜாதகங்கள் கணிக்கப்படுகின்றன.

ஆயினும் தமிழ் நாட்டின் எல்லா இடங்களிலும் அப்படி அல்ல! சில இடங்களில்தான் கேரள மக்களும் குளிகனைக் கணிக்கிறார்கள். குளிகனால் ஏற்படும் பலன்களையும் நாம் நமது கட்டுரையில் ஏற்கனவே விபரித்துள்ளோம்.


## UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following services.

| Service Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Providing Facilities Management Services for Hostels at Siddha Medicine Unit, Kaithady, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9/C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for Kanagasuntheram Male Hostel and Sivagnanasundram Female Hostel, University of Jaffna. | 15,000.00 | 500.00 | M7/C8 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for various Locations, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9/C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |

Bids form may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book or related document and receipt for the cash payment for the above fee at the Shroff's Counter, University of Jaffna until 07.09.2012.

Perfected Bids should be sealed and marked with the job and the name of the service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P. Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.30 p.m on 12.09.2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.
28.08.2012

Registrar
University of Jaffna

(சி/848)


# புதிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

(கிளிநொச்சி)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் (நைற்றா) புதிய பிரிவுகளிற்கான பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நைற்றா முகாமையாளர் ஏ.பி. அல்பேர்ட் அறிவித்துள்ளார்.

கணனி வன்பொருள் திருத்துநர் கற்கை நெறி (Computer Hardware) 6 மாதம் (தகைமை- தரம் 9 சித்தி) கணனி அனுமதிப்பத்திர கற்கைநெறி (SLCDL) 3 மாதம் (க.பொ.த. சா/த சித்தி) பிரத்தியேக செயலாளர் (Personal secretary)- 9 மாதம் (க.பொ.த. சா/த சித்தி), வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்துதல் (Multiskill) 6 மாதம் (தகைமை- தரம் 8 சித்தி) ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியினைப் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயது தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் மாவட்ட முகாமையாளர், NAITA, ஆனந்தபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0343942824 ,0212285615 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியை தவறாது குறிப்பிட வேண்டும். (அ-9)

# பேருந்து விபத்து; 17 பேர் காயம்

அவிசாவளை கெந்தலவத்தையில் இருந்து தெரணியகல நோக்கி பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் விபத்துக்குள்ளானதில் 17பேர் காயமடைந்துள்ளனர்.

மியனவிட்ட பகுதியில் நேற்று அதிகாலை சுமார் 150 அடி பள்ளத்தில் விழுந்து பேருந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் 21 பயணிகள் பயணித்ததாக தெரணியகல பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் காயமடைந்த 17பேர் தெரணியகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை தெரணியகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நாட்டார் கதைகள்

# கர்வம் கொண்ட முயல்

முன்னொரு காலத்தில் பாங்கொக் சுங் என்னும் ஓர் ஊர் இருந்தது. அந்த ஊரில் மழை பெய்வது குறைவு. ஊரில் அடிக்கடி வறட்சி உண்டானது. ஆகையால் ஊர்மக்கள் உண்பதற்கு உணவு போதுமான அளவு கிடைப்பது அரிதாக இருந்தது.

அந்த ஊரில் சகோதரிகள் இருவர் வாழ்ந்தார்கள். அவர்கள் மிகவும் ஏழைகள். அவர்களிடம் வாழைப்பழங்கள் இருந்தன. அவற்றைக் கொடுத்து அரிசி வாங்கிச் சமைத்துச் சாப்பிட்டார்கள்.

மூத்த சகோதரியின் பெயர் சம்பா. இளைய சகோதரியின் பெயர் மாலி. ஒருநாள் மூத்த சகோதரி சம்பா மாலியைப் பார்த்து, நாங்கள் இன்று நீண்ட தூரம் நடந்து வந்துவிட்டோம். ஆனால் இன்னும் அரிசி ஏதும் வாங்கியபாடில்லை என்று கூறினாள்.

எனக்கு நல்ல பசி.மிகவும் களைப்பாக இருக்கிறது என்றாள் மாலி. பொறுமையாய் இரு. நாங்கள் ஓர் ஊரை அடைந்து விட்டோம் என்றாள் சம்பா.

அங்கே ஒரு புத்தியுள்ள முயல் இருந்தது. அந்த முயல் இரு சகோதரிகளும் கூடையில் வாழைப்பழங்களைச் சுமந்து கொண்டு வருவதைக் கண்டது. அந்தக்கூடைகள் அவர்களின் முதுகுப்புறமாகத் தோள்களில் அசைந்து ஆடிக் கொண்டிருந்தன. முயலுக்கும் கள்ள யோசனை ஒன்று தோன்றியது. அந்தத் தந்திர முயல் செத்த முயல் போல வீதியிலே படுத்திருந்தது.

மாலி அந்த முயலைக் கண்டாள். அவள் அதைத்தூக்கி எடுத்துத் தனது கூடையொன்றுள் போட்டாள். அவள் அதைக்கொன்று கறி சமைப்பதற்காகவே எடுத்துச்சென்றாள். ஆனால் கூடையுள் கிடந்த முயல் மெல்ல எழுந்தது. தனது திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கியது. அது எல்லா வாழைப்பழங்களையும் சாப்பிட்டது. சாப்பிட்டு முடிந்ததும் வெளியே பாய்ந்து ஓட்டம் பிடித்தது.

சிறிது நேரத்திற்குப் பின்னர் அந்த முயல் ஒரு கிராமத்தவனிடம் அகப்பட்டுக்கொண்டது. அது தன்னைக் கொல்லவேண்டாமென்று கிராமத்தவனிடம் மன்றாடியது. தனது உயிரைக்காப்பாற்றினால் அந்தக் கிராமத்தவனுக்குக் கூரைவேயும் புல் சுமந்து கொண்டு வந்து கொடுப்பதாகக் கூறியது.

அடுத்தநாள் முயல் வாக்குப் பண்ணியபடி கூரைவேயும் புல்லைச் சுமந்து வரச்சென்றது. அப்பொழுது வழியில் ஒரு புலியைச் சந்தித்தது. முயல் புலியைப்பார்த்து நீ தின்னும் உணவை நான் தருவேன்; கூரைவேயும் புல்லைச் சுமந்து வர உதவி செய்வாயா? என்று கேட்டது. புலியும் அதற்கு இணங்கியது. அது கூரைவேயும் புல்லைச் சுமந்து உதவி செய்தது. அவ்வாறு சுமந்து வரும்போது கடைசிமுறை வந்தது. அப்போது முயல் மெல்லப்பாய்ந்து புலி சுமந்து சென்ற கூரைப்புல்லுக்குத் தீ மூட்டியது. அதனால் எரியுண்ட புலி வருந்திக் குளறியது. அது பதறிப் பதறித் துடித்துக்கொண்டு தண்ணீரைத் தேடி ஓடியது. கடைசியில் புலி ஒரு குளத்தை அடைந்து அக் குளத்துக்குள் பாய்ந்தது. முயலோ மறு திசையில் ஓட்டம் பிடித்தது.

புலி குளத்தில் புரண்டு உருண்டு எழுந்தது. அதற்குப் பொல்லாத கோபம் வந்தது. அதனுடைய உடம்பு முழுவதும் எரிகாயங்கள் காணப்பட்டன. அவற்றைப்பார்க்க புலிக்குக் கோபம் மேலும் கூடியது. எப்படியும் பழிக்குப் பழி வாங்குவேன் என உறுமிக் கொண்டு முயலைத் தேடிப் புறப்பட்டது.

முயல் இலந்தைப்பழங்களைத் தின்று கொண்டிருப்பதைப் புலி கண்டது.



அந்தப்புலி முயலைப்பார்த்து இன்று தான் உனக்குச்சாவு, பார்பார் என்று உறுமியது.

புலியின் கோபத்தை உணர்ந்த முயல்; நாங்கள் பழங்களைப் பகிர்ந்து சாப்பிடுவோம்; வீண் சண்டை எதற்கு? இப்பழங்கள் மிகச்சுவையானவை. நீங்களும் சிலவற்றைச் சாப்பிட்டுப் பாருங்களேன் என்றது.

புலி, முயலின் அன்பான பேச்சைக் கேட்டுக் கோபம் தணிந்தது. புலி பழங்களைப் பொறுக்கி எடுத்துச் சுவைத்துத் தின்றது. புலி ஒவ்வொரு பழமாகப் பொறுக்கித் தின்பதை முயல் பார்த்துக்கொண்டிருந்தது. அப்போது முயல் புலியாரே நிறையப் பழங்களைத் தின்ன வேண்டுமா? அப்படியென்றால் பல பழங்கள் நிறையவுள்ள கிளைகளை இழுத்து முறிக்க வேண்டும் என்று புத்திமதி கூறியது.

அந்தப்புத்திமதியைக் கேட்டுப்புலி மரத்தில் ஏறியது. மரக்கிளையிலுள்ள முட்கள் அதனுடைய பாதங்களைக் கிழித்தன. அவை மிகவும் வேதனையைக் கொடுத்தன. மீண்டும் கோபங் கொண்ட புலி முயலைக்கொல்லப் பாய்ந்தது. புலி தன்னைத் துரத்திக் கொண்டு வருவதைக் கண்ட முயல் தனது உயிரைக் காக்க எண்ணி ஒரு குளத்துள் பாய்ந்தது.முயல் தண்ணீரில் மிதப்பதைப் புலி கண்டது. முயல் இறந்து விட்டது. நான் பழிவாங்கி விட்டேன் என்று புலி மகிழ்ந்தது. அது ஏளனமாக முயலைப்பார்த்து இதுதான் உனக்குத் தகுந்த பாடம்; நீ அங்கேயே கிடந்து இறந்து போ என்று புலி கூறியது.

முயல், புலி கூறிய ஒன்றையும் கேளாதது போல் நடித்தது. நீ இப்போது ஆகாயம் கீழே விழுவதைக் காணவில்லையா? என்று கேட்டது. அந்த மூடப்புலி முயலின் பேச்சை நம்பியது. அதை நம்பிய புலி அது உண்மைதானா? என்று கேட்டது. புலியின் கவனம் தன்மீது இருப்பதை முயல் அறிந்துகொண்டது. உடனே உண்மைதான்; நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்? விரைவாக இக் குளத்துக்குள் குதித்துக்கொள் இல்லாவிட்டால் அந்த ஆகாயம் உன் தலை மேல்தான் விழும் என்று முயல் கூறியது. மீண்டும் புலி ஏமார்ந்தது. அது குளத்துக்குள் பாய்ந்தது. அப்போது அந்த முயல் புலியின் முதுகிலே காலை வைத்துக் குளக்கரைக்குத் திரும்பவும் வந்து சேர்ந்தது.

பாங்கொக் சுங் கிராமவாசிகள் சிலர் அந்தப்புலி தண்ணீரின்மேலே தலை தெரிய மிதந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் தங்களுடைய அம்பு, ஈட்டி என்ற ஆயுதங்களால் அந்தப் புலியைக் கொன்றார்கள். அவர்கள் அப்புலியின் இறைச்சியை உண்டார்கள்; அதனுடைய தோலை விற்றார்கள். பின்பு இறந்த அப்புலி ஓடையில் வாழும் (சிப்பி) கிளிஞ்சலாக மறுபிறப்பு எடுத்தது.

ஒருநாள் இந்த முயல் அந்த ஓடையில் தண்ணீர் குடிக்கவந்தபோது அச் சிப்பியைக் கண்டது. முயல் சிப்பியைப் பார்த்து நீ மெல்லமெல்ல ஊர்கிறாயே! எப்படி மற்றவர்களை ஓடிப் பிடிக்கப்போகிறாய்? என்று கேட்டது.

மந்தமோ விரைவோ நான் தாராளமாக வாழுவேன். அதில் எனக்கு இடைஞ்சல் ஒன்றும் இல்லை என்று சிப்பி கோபத்தோடு பதில்கூறியது.

சிப்பி விட்டுக்கொடுக்காமல் வாதிடும் என்பது முயலுக்குத் தெரியும் எனவே முயல் ஓட்டப் போட்டி வைப்போமா? எனச் சவால் விட்டது.

நிச்சயமாக வெல்கிறேன் நான் அந்தப்போட்டியில் தோற்றால் இங்கே தண்ணீர் குடிக்க ஒருநாளும் வரமாட்டேன் என்றது முயல். ஓட்டப் போட்டியில் தனக்குத்தானே வெற்றி கிடைக்கும் என்று முயல் நம்பியது. நான் இப்போது ஆயத்தம் இல்லை. இன்னொரு நாளைக்கு ஓட்டப் போட்டியைப் பின் போடுவோம் என்றது சிப்பி.

முயல் வீட்டுக்குப்போன பின்பு சிப்பி தனது நண்பர்களை அழைத்துக் கூட்டம் கூட்டியது. அவ்வாறு கூடி ஓட்டப்போட்டியில் வெற்றிபெற ஒரு தந்திரம் செய்தது.

அந்த நண்பர்களைப்பார்த்து சிப்பிகளாகிய நாங்கள் தரையில் ஓட முடியாது; நாங்கள் நீரில் மட்டுமே விரைவாக ஓடுவோம். ஆனால் அந்த முயல் தரையில் விரைவாக ஓடும். ஓட்டப் போட்டி நடக்கும் போது நான் எங்கே நிற்கிறேன் என்று அறிய என்னைக் கூப்பிட்டுக் கூப்பிட்டுப்பார்க்கும். ஆகையால் நான் தனித்து அந்த முயலோடு ஓட்டப்போட்டியில் ஓடுவது புத்தியல்ல. நீங்கள் எல்லோரும் எனக்குக் கைகொடுத்து உதவுங்கள். நாங்கள் எங்கள் சக்தியை வீணாக்கத் தேவையே இல்லை, எங்களுள் ஒவ்வொருவரும் தண்ணீரில் வெவ்வேறு இடங்களில் நிற்க வேண்டும். அவ்வளவுதான். முயல் கூப்பிட்டுப் பார்க்கும்போது வரிசையில் முயலுக்கு முன் நிற்பவர் திரும்பிக் கூப்பிட வேண்டும்.நாங்கள் ஓடைக் கரையின் நெடுகிலும் இப்படியே செய்வோம். உங்களுக்கு விளங்குகிறதா? என்று கூறியது.

இந்தத்திட்டத்தை எல்லாச் சிப்பிகளும் நன்றாக விளங்கி ஏற்றுக் கொண்டன. அவை ஓடையின் கரையில் வெவ்வேறு இடங்களிலே தங்கி நிற்கச் சென்றன. போட்டிநாளும் வந்தது. முயலும் வாக்குப்பண்ணியபடி போட்டிக்கு ஆயுத்தமாக வந்தது. குறிப்பிட்ட நாளில் ஓட்டப்போட்டி தொடங்கியது. முயல் தன்னால் முடிந்த அளவு வேகமாக ஓடியது. ஆனால் அந்தச் சிற்பி நின்ற இடத்தைவிட்டு நகரவேயில்லை. முயல் ஓரளவு தூரம் ஓடியபின் சிப்பி தனக்குப் பின்னே அதிக தூரத்தில் மெல்லமெல்ல ஊர்ந்து வருமென நினைத்தது. அது சிறிது தரித்து நின்று திரும்பிப் பார்த்தது. எங்கே அந்தச்சிப்பி? என்று கூவியது. அப்போது நான் இங்கே நிற்கிறேன் என்று முயலுக்கு முன்னால் நின்ற ஒரு சிப்பி கூறியது.

சிப்பியின் அதிவேகத்தைக்கண்டு முயல் திகைத்தது. முயல் அந்தச் சிப்பியை முந்த நினைத்து மீண்டும் வேகமாக ஓடியது. முயல் முன்னர் போல அடிக்கடி பின் திரும்பிச் சிப்பியைக் கூப்பிட்டுப்பார்த்தது.அவ்வாறு கூப்பிட்ட ஒவ்வொரு வேளையிலும் அந்த முயலுக்கு முன்னின்ற சிப்பியின் பதில் கிடைத்தது.

முயல் நன்றாகக் களைக்கும் வரை ஓடியது. அது கடைசியிலே களைத்து விழுந்து இறந்தது. அந்த ஓட்டப் போட்டியின் பின் ஒரு முயலும் அந்த ஓடையில் நீர் குடிக்கப்போகத் துணியவில்லை. முயல்கள் அன்றிலிருந்து இன்றுவரையும் புற்களிலும் செடிகளிலும் உள்ள பனித்துளிகளை மட்டுமே நக்கிப் பருகுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியை விரைவில் புனரமைக்குமாறு கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள கந்தசுவாமி கோவில் வீதியானது நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் அண்மையில் நகரசபையினால் கேள்விப்பத்திரம் மூலமாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டும் இதுவரை பாலவேலை இடம்பெற்று வரும் நிலையில் வீதி திருத்தப்படாது காணப்படுகின்றமையினால் நகரசபை கூடுதல் கவனமெடுத்து விரைவில் இவ் வீதியை திருத்தம் செய்து தாருங்கள் என வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

வவுனியா நகர மத்தியில் உள்ள முதலாம் மற்றும் இரண்டாம் குறுக்குதெருக்கள் உட்பட கந்தசுவாமி கோவில் வீதி, மில் வீதி என்பன மிகவும் மோசமாக பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன. இவ்வீதிகளில் சிறு சேதம் ஏற்படும் போதே வர்த்தகர்களால் நகரசபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

எனினும் நகரசபை பாரியளவில் சேதமடையும் வரையில் வீதியை திருத்தவில்லை. இதனால் மக்கள் பாவனைக்கு உதவாததாக காணப்படுகின்றது நகரசபையால் இழுத்தடிக்கப்பட்ட இவ்வீதி புனரமைப்பு அண்மையில் கந்தசுவாமி கோவில் வீதி ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டு பால வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

எனினும் கடந்த இரண்டு மாதகாலமாக மிகவும் மந்தமான நிலையில் இப்பால வேலைகள் இடம்பெற்று வரும் நிலையில் பாரிய வாகனங்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறாகவும் பாடசாலை மாணவர்கள் செல்ல முடியாத வகையிலும் காணப்படுகின்றது என தெரிவிக்கும் வர்த்தகர்கள் வீதியில் கிரவல் கொட்டப்பட்டுள்ளமையினால் வர்த்தக நிலையங்களில் தூசுகள் படியும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, நகரசபை அவ்வீதியை கூடுதல் கவன்ம் செலுத்தி மிகவிரைவாக திருத்தம் செய்து தருமாறு அப்பகுதி வர்த்தகர்கள் கோரியுள்ளனர். (ஆ-9-266)

# புலிகள் இயக்கம் மீதான தடை வழக்கில் வாதாடுவதற்கு வைகோவிற்கு அனுமதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடை குறித்த வாதங்களை முன்வைக்க ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி வி.கே. ஜெயின் அனுமதித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீட்டிப்பது பற்றிய தீர்ப்பாயத்தின் அறிவிப்பு கடந்த 18 ஆம் திகதி வெளியிடப்பட்டது. தீர்ப்பாயத்தின் விசாரணையில் கலந்து கொண்ட ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ தம்மையும் விசாரணையில் பங்கேற்க அனுமதிக்கக் கோரினார்.

இது தொடர்பான விசாரணை டில்லி உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. அப்போது மத்திய அரசு வழக்கறிஞர் சாண்டியோக் தமது வாதத்தை எடுத்து வைத்தார். வைகோ தனது தரப்பு வாதத்தை கூறுகையில்,

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் , அனுதாபிகளைச் சுட்டிக்காட்டித்தான் இந்த தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நான் விடுதலைப் புலிகளின் ஆதரவாளன், அனுதாபி ஆவேன். கடந்த தீர்ப்பாயத்திலேயே எங்கள் இயக்கமான ம.தி.மு.கவை மத்திய அரசு தன்னுடைய ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளது. புலிகளை ஆதரித்தேன் என்பதற்காக என்மீது வழக்குகள் போடப்பட்டு நிலுவையில் உள்ளது. எனவே, சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும் இந்த விசாரணையில் நான் பங்கேற்கவும் அனுமதிக்க வேண்டும் என்றார்.

ஆனால், சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க முடியாது. அதேநேரத்தில் தீர்ப்பாய விசாரணையிலும் புலிகள் மீதான தடை குறித்து வைகோ தன் வாதங்களை முன்வைக்கலாம் என்று நீதிபதி வி.கே.ஜெயின் ஆணை பிறப்பித்தார்.

தீர்ப்பாயத்தின் அடுத்த அமர்வு சென்னையில் எதிர்வரும் செம்டெம்பர் மாதம் 28, 29 ஆம் திகதி ஆகிய இரு நாட்களிலும் நடைபெறும். (அ-2)

# சுவிஸ் வங்கியில் கணக்கு வைத்திருப்போர் விபரத்தை முடிந்தால் வெளியிடுங்கள்

## முன்னாள் எம்.பி. கே.டி. லால்காந்த கோரிக்கை

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து வங்கிகளில் மில்லியன் கணக்கான பணத்தை வைப்பிலிட்டவர்கள் பற்றிய தரவுகளை முடிந்தால் வெளியிடுமாறு ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த அரசாங்கத்திற்கு சவால் விடுத்துள்ளார்.

கொழும்பு பொதுநூலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2002 ஆம் ஆண்டில் இலங்கையர்கள் சுவிஸ் வங்கிகளில் 22.9 மில்லியன் சுவிஸ் பிராங்குகளையும் 2011 ஆம் ஆண்டில் 85 மில்லியன் சுவிஸ் பிராங்குகளையும் வைப்புச் செய்தனர்.

அநேகமானவை சேமிப்பு கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஹெட்ஜின் கொடுக்கல் வாங்கல்களினால் பல மில்லியன் பொதுமக்களின் பணம் விரயமாகியுள்ளது.

இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களின் மூலம் ஈட்டப்பட்ட பணம் சுவிஸ் வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டனவா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவி வருகிறது.

அண்மைக்காலமாக நாட்டில் செய்து கொள்ளப்பட்ட பொருளாதார உடன்படிக்கைகளை கவனிக்கும் போது முறைகேடுகள் இடம்பெற்றிருக்க கூடும் என்ற சந்தேகம் எழுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



வவுனியா பூந்தோட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய எரிவாயு தகன மயானம் நேற்று முன்தினம் பொதுமக்களின் பாவனைக்காக வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டதை படத்தில் காணலாம். (படம் :- பூந்தோட்டம் செய்தியாளர்)

# காங்கேசன்துறை தொடருந்து பாதை 2014 இற்குள் நவீனமயப்படுத்தப்படும்

## பாதுகாப்பு செயலாளர் நம்பிக்கை

காங்கேசன்துறை தொடரூந்து பாதையை நவீனமயப்படுத்தும் பணிகள் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நிறைவு பெறும் எனவும் மதவாச்சியில் இருந்து மடு வரையான தொடரூந்து பாதையின் நிர்மாணிப்பு பணிகள் அடுத்த மார்ச் மாதம் நிறைவு பெறும் எனவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அத்துடன் மடு முதல் தலைமன்னார் வரையான தொடரூந்து பாதையின் நிர்மாணிப்பு பணிகள் அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்படும்.

விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் காரணமாக வடபகுதிக்கான தொடரூந்து பாதைகள் வவுனியா வரை மாத்திரமே மீதமாகியது. ஏனைய பாதைகள் புலிகளால் அழிக்கப்பட்டன.

அதேவேளை வடக்கில் இருந்த படையணிகளில் 8 படையணிகள் கிழக்கு மற்றும் தென்பகுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. இந்த வருடத்தில் மாத்திரம் 100 நாடுகளை சேர்ந்த 31 ஆயிரத்து 500 பேர் வடபகுதிக்கு விஜயம் செய்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# உலக நாடுகளுடனான உறவுகளில் சுமுகமான நிலை நிலவி வருகின்றது

## வெளிவிவகார அமைச்சர் பெருமிதம்

(கொழும்பு)

உலக நாடுகளுடனான உறவுகளில் சுமுக நிலை நிலவுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேசத்தில் இலங்கையின் நன்மதிப்பு கிரமமான முறையில் அபிவிருத்தி அடைந்து வருகிறது.

அண்மைய வாரங்களில் மூன்று நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததன் மூலம் இலங்கையின் சர்வதேச உறவுகள் சிறந்த நிலையில் காணப்படுகிறது.. அது தொடர்பில் கவலையடைய வேண்டிய அவசியமில்லை.

மூன்று தசாப்த யுத்தத்தின் பின்னர் உலகின் எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவிற்கு இலங்கையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் ஐந்து சிரேஷ்ட அமைச்சர்கள் அண்மைக்காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். எதிர்காலத்தில் சீன மற்றும் ரஷ்ய உயர்மட்ட இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவுறுத்தப்பட்ட காலப்பகுதி முதல் இலங்கையின் வெளியுறவுக்கொள்கை தொடர்பில்பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்ற நிலையில் பீரிஸ் இத்தகவலை வெளியிட்டுள்ளார். (அ-2)


நீங்காத நினைவுகளுடன்

18 ஆம் ஆண்டு நினைவு நாள்



1 ஆம் ஆண்டு நினைவு நாள்

ஆண்டுகள் பல கழிந்தாலும் ஆறவில்லை எம்துயர்! காலங்கள் கழிந்தனவே அன்றி கண்ணீர் வற்றவில்லை உங்கள் நினைவுகள் எம்மை விட்டு ஒரு போதும் நீங்காது! உங்கள் ஆத்மசாந்திக்காக செல்வச்சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

30-08-2012 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சுன்னாகம் வீதி
புத்தூர் வடக்கு, புத்தூர். (303)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

MMBL **Money Master**

Company Registration No.P.V 986

# வவுனியா, புதுக்குடியிருப்பைத் தொடர்ந்து

**WESTERN UNION** மணி டிரான்ஸ்பர்


# கிளிநொச்சியிலும் இன்று கோபி ஏஜென்சி உதயம்...

வேகமாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும்

வெஸ்டர்ன் யூனியன் மூலம் உலகெங்கும் இருந்து அனுப்பும் பணத்தினை ஒரு சில நிமிடங்களில் கோபி ஏஜென்சியில் பெற்றுக்கொள்ளலாம்

வெஸ்டர்ன் யூனியனால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது கிளிநொச்சி மற்றும் அதனை அண்மித்த பகுதி மக்களுக்காக!







நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!

# கோபி ஏஜென்சி

இல.355, A 9 வீதி, கிளிநொச்சி. (கிளிநொச்சி கந்தசாமி கோவில் அருகாமை)

(C-849)

- பல வருடங்களாக வெஸ்டர்ன் யூனியன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பணப்பரிமாற்றம் சேவையினை வழங்கி வருகின்றோம்.
- வெளிநாட்டிலிருந்து 10 இலக்கங்கள் கிடைத்த உடனேயே கோபி ஏஜென்சியை நாடுங்கள்.
- ஒரு சில நிமிடங்களில் பணத்தினை பெற்று வீடு செல்லலாம்.
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும் (ஞாயிறு தவிர்ந்த)

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:-021 2283999, Fax 0212283998**

அலுவலக நேரம்: திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**கோபி ஏஜென்சி**

தலைமைக்காரியாலயம்
33,மில் வீதி, வவுனியா
024 2225888/024 2222411

WESTERN UNION MONEY TRANSFER

கிளைக்காரியாலயம்
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி,
புதுக்குடியிருப்பு
0243248979, 0777343300

WESTERN UNION

வெஸ்டர்ன் யூனியனின் பிரதான முகவர் MMBL மணி டிரான்ஸ்பர்
பிறைவேட் லிமிட்டட் 7 ஆம் மாடி, எய்ட்கென் ஸ்பென்ஸ் டவர்-II
இல.315,வொக்சோல் வீதி,கொழும்பு-02 உடனடி அழைப்பிற்கு-0115529999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமங்களுடன் போராடி அவற்றை வெல்வது மனித பண்புகளில் மிகவும் சிறந்தது.

– சாமுவேல்ஸ் ஜான்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ். அரச அதிபருக்கு ஓர் அன்புமடல்

யாழ்ப்பாண அரச அதிபருக்கு அன்பு வணக்கம்.

இலங்கையிலுள்ள அத்தனை மாவட்டங்களிலும் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருக்கு இருக்கக்கூடிய கௌரவமும் மதிப்பும் அதீதமானது.

இதன்காரணமாகவோ என்னவோ அந்த ஆசனத்தில் நீண்டகாலம் தொடர்ந்து இருப்பதில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இருப்பினும் மாவட்ட மட்டத்தில் அரச நிர்வாகத்தின் அதியுயர் அதிகாரம் உள்ள பதவியில் இருக்கும்போது செய்ய வேண்டிய கடமைகளை செய்தாக வேண்டும். அப்போதுதான் அந்தப்பதவியால் மக்கள் நன்மை அடைவர். இல்லையேல் மக்களின் நிலைமை மிக மோசமாகும்.

எதுவாயினும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாண மாவட்ட செயலகங்கள் மீதான அரசியல் நெருக்கடிகளும் பலமானவை என்பதை நிராகரித்து விட முடியாது.

அரசியல் நெருக்கடிகள் ஏற்படும் என்பதற்காக ஒதுங்கி இருக்கமுடியாது என்பதை தாங்கள் அறியாதவரல்ல.

எனினும் சமூக உறவு நிலைகளில் மற்றும் சமூகப் பிரச்சினைகளில் யாழ்ப்பாண அரச அதிபர்களின் வகிபங்கு திருப்தியானதாக இருந்துள்ளது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டும் அதேநேரம், நாட்டின் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பிராந்திய ஊடகங்கள் அதிகம் என்ற வகையில் யாழ்.மாவட்ட அரச அதிபர் தொடர்பான செய்திகள், அவரின் உரைகள், அவர் விடுக்கும் அறிக்கைகள், சமூகப் பிரச்சினைகளில் அவர் எடுக்கும் நடவடிக்கைகள், பேட்டிகள் என பல்வேறு கோணங்களில் யாழ். மாவட்ட அரச அதிபரின் பரிணமிப்புகள் வெளிப்படும் என்பது தாங்கள் அறியாததல்ல.

தங்களுக்கு முன்னர் அரச அதிபராக இருந்த திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பெண்கள் தொடர்பில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை வெளிப்படுத்தியவர் என்பதும் அதன் மூலம் பெண்களை விழிப்படையச் செய்ததுடன் பெண்களுக்கான சமூகப் பாதுகாப்புப் பற்றிய பொறுப்புணர்வை ஏற்படுத்தியவர் என்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறப்படவேண்டிய விடயம்.

அதேபோல் யாழ்.மாவட்ட அரச அதிபராக இருந்த கே.கணேஸ் அவர்கள் போர்ச் சூழமைவு மற்றும் வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மக்களை கொண்டுவந்து மீள் குடியமர்த்தல் உட்பட பல்வகைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த அதேநேரம் சமூகப் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தினார்.

தற்போது யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக பதவியேற்றிருக்கும் தாங்களும் அவையடக்கத்துடன் பல்வேறு செயற்பாடுகளை அமுல்படுத்தி வருகிறீர்கள் என்ற உண்மையின் மத்தியில்,

சமூகப் பிரச்சினைகள் மற்றும் பெண்கள், மாணவிகள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் தாங்கள் கூடிய அவதானம் செலுத்த வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

பொலிஸார் மற்றும் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவுடனான சந்திப்பை மாதத்தில் ஒரு தடவை யேனும் நடத்துவது சமூகப் பிறழ்வுகளை தடுக்க உதவும். இதைத் தாங்கள் செய்வீர்கள் என நம்புகின்றோம்.

# வவுனியாவிலும் காணாமல்போனோருக்கு மரணச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை

## தடுத்து நிறுத்துமாறு சர்வதேசத்தைக் கோருகிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி

(பூந்தோட்டம்)

முல்லைத்தீவு, கிளிநொச்சியைத் தொடர்ந்து இப்பொழுது வவுனியாவிலும் யுத்தத்தின் பின்னர் சரணடைந்தும் இன்னபிற வழிகளில் பிடிபட்ட பின்னரும் காணாமல்போகச் செய்யப்பட்டோருக்கான மரணச் சான்றிதழை வழங்குவதற்கான முயற்சிகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் அத்துடன் மேலும் சிலர் அண்மையில் காணாமல் போயுள்ளதாகவும் தகவல் கிடைத்திருப்பதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஆகவே இதனைத் தடுத்து நிறுத்துவதற்குச் சர்வதேச சமூகமும் மனித உரிமைகள் அமைப்புக்களும் மனித உரிமை ஆர்வலர்களும் முன்வர வேண்டும் என அவர் அறிக்கையொன்றினை நேற்றையதினம் சர்வதேசத்தினை நோக்கி விடுத்துள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

யுத்தம் நடைபெற்ற காலகட்டத்திலும் யுத்தத்தின் பின்னரும் இராணுவத்திடம் சரணடைந்ததன் பின்னர் காணாமல் போகச் செய்யப்பட்டோருக்கும், இடைத்தங்கல் முகாம்களில் இருந்தும் பிற இடங்களில் இருந்தும் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல்போகச் செய்யப்பட்டோருக்கும் வவுனியாவிலும் மரணச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பொலிஸார் மூலம் காணாமல்போன வர்களின் வீடுகளுக்கு மரணச் சான்றிதழுக்கான விண்ணப்பங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே தமது பிள்ளைகளும் கணவரும் நெருங்கிய உறவினரும் வேண்டப்பட்டவர்களும் உயிருடன் இருக்கின்றனரா என்பது தெரியாமல் ஏதோவொரு நம்பிக்கையில் வாழ்க்கையைக் கடத்திக்கொண்டிருக்கும் எமது மக்கள் அரசின் இந்நடவடிக்கையால் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளதோடு கவலையும் அடைந்துள்ளனர்.

அத்துடன் பொலிஸார் கொடுத்த விண்ணப்பப்படிவங்களையும் வாங்க மறுத்துள்ளனர். எமக்கு எமது பிள்ளைகள் வேண்டும். எமக்கு எனது கணவர் வேண்டும். எமக்கு எமது உறவுகள் வேண்டும். அவர்கள் குற்றமிழைத்திருந்தால் சட்டத்தின் முன்னிறுத்தி தண்டனை வழங்குங்கள். அதைவிடுத்து மரணச்சான்றிதழ் வழங்குவது எந்த வகையில் நியாயம் என்று அவர்கள் கேட்கின்றனர்.

ஆகவே சர்வதேச சமூகத்தினரும் மனிதவுரிமைகள் அமைப்புக்களும் மனித உரிம ஆர்வலர்களும் நல்உள்ளம் கொண்டோர்களும் இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு காணாமல் போகச் செயற்பட்டோரின் விடயம் தொடர்பான உண்மை நிலையைக் கண்டறிந்து தமிழ்மக்களுக்கு உரிய நியாயம் கிடைப்பதற்கு முயற்சிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இது ஒருபுறமிருக்க மிக அண்மையில் வவுனியாவில் சில யுவதிகள் காணாமல் போயுள்ளனர். தமது பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி அவர்கள் பற்றிய விபரங்களை வெளியிடுவதற்கு பெற்றோர் தயங்குகின்றனர். இவ் விடயத்தை மனதிற்குள்ளும் தேக்கிவைக்க முடியாமல் மிகுந்த துன்பத்துடன் மன வேதனையை அனுபவித்துவரும் குடும்பத்தினரின் பரிதாபநிலையையும் அதனால் அவர்கள் மனநோயாளிகளாக உருவாவதற்கான சூழலை கருத்திற்கொண்டு இந்த விடயத்திலும் அனைவரும் கவனம் செலுத்தவேண்டும்.

எமது இளைஞர்களும் யுவதிகளும் வெளிநாடுகளுக்கும் குறிப்பாக அவுஸ்திரேலியாவிற்குச் செல்வதற்கு இதுவும் ஒரு காரணம் என்பதை இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் உணர்ந்து கொள்ளவேண்டும். தற்பொழுது ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏராளமானோர் ஆபத்தான கடற்பயணத்தில் உயிரிழந்தும் உள்ளனர்.

எனவே எஞ்சியுள்ள அரசியல்கைதிகளையும் புனர்வாழ்வு முகாம் உள்ளிட்ட ஏனைய தடுப்பு முகாம்களிலுள்ள அனைத்துத் தமிழ் பிரஜைகளையும் நிபந்தனையின்றி விடுப்பதற்கு சர்வதேச சமூகம் அனைத்து நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும் என அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2-266)

# காசோலை மோசடி குறித்து முறைப்பாடுகள் அதிகரிப்பு!

## யாழ். பொலிஸார் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்தில் காசோலை மோசடி தொடர்பான முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக யாழ்.பொலிஸ் நிலைய குற்றவியல் தடுப்புப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ் முறைப்பாடுகளில் கூடுதலானவை யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகவே உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்குக் காரணம் தற்போது யாழின் பல பகுதியிலும் வீதி அகலிப்புப் பணிகள் நடைபெற்று வருவதனால் அநேகமான வர்த்தக நிலையங்கள் இயங்காமலே காணப்படுகின்றன.

இதனால் ஏற்கெனவே நிறுவனங்களிடம் கடன் அடிப்படையில் பொருட்களினை இறக்குமதி செய்துவிட்டு தற்போது வர்த்தக நிலையங்கள் இயங்காத நிலையில் அப் பணத்தினை மீளச் செலுத்த முடியாத நிலை காணப்படுவ தாகவும் வங்கிகளில் பணவைப்பு செய்யப்படாததனால் நிறுவ்னங்களுக்கு கொடுத்த காசோலைகள் திரும்பி விடுவதனால் அவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறையிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதிப் புனரமைப்பு பல மாதங்களினை கடந்துள்ள போதிலும் இது வரை முடிபுறும் நிலையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ந-4)

# எரிகாயங்களுக்கு உள்ளான பெண் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்குள்ளான நிலையில், ஊர்காவற்றுறையினைச் சேர்ந்த பெண் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த மேரி பற்றிமா (வயது 62) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே எரிகாயங்களுடன் யாழ். போதனாவில் அனுமதிக்கப் பட்டுள் ளார்.

வீட்டின் கதவு மூடப்பட்ட நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் பின்னர் உறவினர்கள் கதவினை உடைத்து தீயை அணைத்து இவரை ஊர்காவற்றுறை வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-4)

# திருமாவளவன் உட்பட 500 பேர் கைது

பூந்தமல்லி அருகே கரையான் சாவடியில் உள்ள இலங்கை அகதிகள் சிறப்பு முகாமையும்;செங்கல்பட்டு சிறப்பு அகதிகள் முகாமையும் மூடக் கோரி திருமாவளவன் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் திருமாவளவன் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் 500 இற்கும் மேற்பட்டோர் திரண்டனர்.

இதன்போது பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியதுடன் திருமாவளவன் மற்றும் 500 பேரையும் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ந-1)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உழைக்கும் கைகள் வேண்டும்



கடவுள் பிரமாண்டமான வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் சுற்றளவுப் பகுதியான பரிதி எங்கும் கிடையாது. ஆனால் அந்த வட்டத்தின் மையம் அனைத்து இடங்களிலும் உள்ளது.

எதையும் பரபரப்புடன் செயற்படுத்தக்கூடாது. மாறாக தூய்மை, பொறுமை, விடாமுயற்சி, இம் மூன்றும் வெற்றிக்குத்தேவை.

நீ ஏற்கனவே தீர்க்கதரிசியாகத்தான் இருக்கிறாய். ஆனால், அதை அறியாமல் இருக்கிறாய். இதை நீ உணரவேண்டும்.

ஆன்மீக வாழ்க்கைக்கோ, மனதுக்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டு பண்ணும் எதையும் உன் கால்விரலால் கூட தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கை.

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் நமக்குத் தேவை.

எல்லாப்பேய்களும் நம் மனதில்தான் இருக்கின்றன. மனம் க்ட்டுப்பட்டு அடங்கியிருந்தால், எந்த இடத்தில் நாம் இருந்தாலும் எங்கிருந்தாலும் அது சொர்க்கமாக மாறிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்

(வேலணை)

அரச அதிபர் வெற்றிக் கிண்ணத் திற்கான உதைபந் தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை புங்கன்குளம் சனசமூக நிலைய மைதானத்தில் நடை பெற்ற போட்டிகளின் விப ரம் வருமாறு,



முதலாவது தெரிவுப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மரு தங்கேணி பிரதேச செயலக அணி யும் மோதின.

இப்போட்டியில் மருதங் கேணி பிரதேச செயலக அணி 4:0 என்ற கோல்கள் அடிப்ப டையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது தெரிவுப் போட்டியில் யாழ். மாவட்டச் செயலக அணியும் சங்கானை பிரதேச செயலக அணியும் மோதின.

இப்போட்டியில் யாழ்.மாவட் டச் செயலக அணி 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாவது தெரிவுப் போட் டியில் பருத் தித்துறை பிரதேச செயலக அணியும் உடு வில் பிரதேச செயலக அணியும் மோதின.

இப்போட்டியில் பருத்தித் துறை பிரதேச செயலக அணி 4:1 என்ற கோல்கள் அடிப் படையில் வெற்றிபெற்றது.

நான்காவது தெரிவுப் போட்டி யில் சாவ கச்சேரி பிரதேச செயலக அணியும் காரை நகர் பிரதேச செயலக அணியும் மோதின.

இப்போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல்கள் அடிப் படையில் வெற்றி பெற்றது.

முதலாவது காலிறுதிப்போட் டியில் மருதங் கேணி பிரதேச செயல்க அணியும் யாழ். மாவட்டச் செயலக அணியும் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் மருதங் கேணி பிரதேச செயலக அணி 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறி யது.

இரண்டாவது காலிறுதிப் போட் டியில் பருத் தித்துறை பிரதேச செயலக அணியும் சாவ கச்சேரி பிர தேச செயலக அணியும் பலப் பரீட்சை நடத்தின. இப்போட்டியில் பருத்தித் துறை பிரதேச செயலக அணி 6:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அரையி றுதியில் மருதங் கேணி பிரதேச செயலக அணி யோடு மோதவுள்ளது.

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவ ளம் உதயதாரகை விளையாட்டுக்க ழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தா ட்டச் சுற்றுப்போட்டியில் பருத்தித் துறை லீக்கிற்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

இதில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்றைய தினம் நடைபெறும் ஆட் டத்தில் வல்வை A அணியை எதிர்த்து பொம்மேர்ஸ் அணி மோதவுள்ளது.

அடுத்தபோட்டியில் றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் நண்ப ர்கள் அணி மோதவுள்ளது. (3)

## நவஜீவன் வி.க. அணி வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளை யாட்டுக்கழகம் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகிறது.




கடந்த சனிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற கால் இறுதியாட்டம் ஒன்றில் திக்கம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள் ளது.

இப்போட்டியில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன் விளை யாட் டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இப்போட்டியில் நவஜீவன் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறி யுள்ளது.



ஆசிய நாடுகளுக்கிடையிலான 19 வயதுப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடை யிலான உதைபந்தாட்டப்போட்டியில் கலந்து கொள்ளும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் கில்மன் சொய்சாவும் இலங்கைத் தேசிய அணியின் தலைமைப்பயிற்றுவிப்பாளரும் இப்பாடசாலை ஆசிரியருமான ப.ஞானரா ஜையும் படத்தில் காணலாம்.

## கற்கோவளம், உதயதாரகை வி.க. உதைபந்தாட்டத்தில் றேஞ்சர்ஸ், டயமன்ஸ் அணிகள் வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளை யாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பருத் தித்துறை லீக்கிற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் டயமன்ஸ் அணியை எதிர்த்து நெடியகாடு அணி மோதியது.

இதில் 6:0 என்ற கோல்கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்றது.

அடுத்தபோட்டியில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் அணி மோதியது. இதில் 4:2 என்ற கோல்கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. (3)

## உதைபந்தாட்ட கலந்துரையாடல்

(வேலணை)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான கலந்துரையாடல் கரவெட்டி பிரதேச செயலக மண் டபத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது. 21 வயதுப்பிரிவிற்கான ஆண்கள் உதைபந்தாட்டப் போட்டிகள் தொடர் பாக கலந்துரையாடல் நடத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட அனைத்து கழகங்களையும் பங்குகொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அனுராகாந்தன் தெரிவித்துள்ளார்.

## சென்.ஆன்ஸ், ஜெகமீட்பர் அணிகள் வெற்றி

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளந்தளிர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த கழக உறுப்பினர்கள் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகள் விபரம் வருமாறு,

கிராஞ்சி சென்.தாரகை விளையாட்டுக் கழக அணிக்கும் வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடை யில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.


இதில் வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் வலைப்பாடு ஜெகமீட்பர் விளை யாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்

## முதல் சுற்றில் பெடரர், ஷரபோவா




அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர், மரியா ஷரபோவா ஆகியோர் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு முன்னேறினர்.

2012ஆம் ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க (யுஎஸ்) ஓபன் டென்னிஸ் நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது.

உலகின் முதல் நிலை வீரரும்,5 முறை சம்பியன் பட்டம் வென்றவருமான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) தொடக்க சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த டொனால்ட்யங்கை எதிர் கொண்டார்.

இதில் பெடரர் 6-3,6-2,6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 2வது சுற்றுக்கு முன்னேறினார். அவர் 2-வது சுற்றில் ஜேர்மனி வீரர் பிஜோரனை சந்திக்கிறார்.

உலகின் 3-ம் நிலை வீரரான இங்கிலாந்தின் அன்டி முர்ரே முதல் சுற்றில் 6-2,6-4,6-1 என்ற நேர் செட் கணக்கில் ரஷ்யாவின் அலெக்சை தோற் கடித்தார்.




மற்றைய ஆட்டங்களில் 23ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் மார்டி விஜ் 17ஆம் நிலை வீரரான ஜப்பானின் நிசிகோரி ஆகியோர் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார்கள்

உலகின் 3-ம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா முதல் சுற்றில் ஹங்கேரியைச் சேர்ந்த மிலிண்டாவை எதிர்கொண்டார்.


இதில் ஷரபோவா 6-2,6-2 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்றார்.

உலகின் நம்பர் வன் வீராங்கனையான பெலாரஸின் விக்டோரியா அசரென்கா 6-0,6-1 என்ற கணக்கில் ரஷ்யாவைச் சேர்ந்த பனோபாவை வீழ்த்தி 2-வது சுற்றில் நுழைந்தார்.

23-ம் நிலை வீராங்கனையும் 3 முறை சம்பியனுமான கிம்கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) தொடக்க சுற்றில் விக்டோரியாவை (அமெரிக்கா) 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வென்றார்.

இதேபோல் 9-ம் நிலை வீராங்கனையான லீ னா (சீனா) 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

## அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் சமந்தா



அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிய்யின் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்கில் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டத்தில் நடப்புச் சம்பியனும் 7-ம் நிலை வீராங்கனையுமான அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர், குரோஷியாவின் பெட்ரா மாட்டிக்கை சந்தித்தார்.

இதில் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடிய சமந்தா ஸ்டோசுர் 6-1,6-1 என்ற நேர் செட்டில் எளிதில் வெற்றிபெற்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் செக் குடியரசு வீராங்கனை ஹாடெக்கா 6-3,6-3 என்ற நேர் செட் கணக்கில் 27-ம் நிலை வீராங்கனையான ஸ்பெயினின் மெடினா காரிகுயெஸை வீழ்த்தி 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் அவுஸ்திரேலியாவின் டெலாக்கா மற்றும் ஜோர்ஜியாவின் தாதிஜிவ்லியா ஆகியோர் வெற்றி கண்டனர்.

மழை காரணமாக சில ஆட்டங்கள் பாதிக்

## சச்சினுடன் என்னை ஒப்பிட வேண்டாம்



என்னை நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சினுடன் ஒப்பிடவேண்டாம் என்றும் இது முற்றிலும் பொருத்தமற்றது எனவும் இந்திய அணியின் துணை அணித தலைவர் விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் இளம் வீரரான விராட் ஹோலி, சமீபகாலமாக ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார்.

இந்நிலையில் இவர் சச்சினின் சாதனையை முறியடிக்கலாம் என கூறப்பட்டுவருகிறது.

இதுகுறித்து ஹோலி கூறியதாவது, சர்வதேச போட்டிகளில் அவர் 100 சதம் அடித்துள்ளார். இது மிகப் பெரிய சாதனை. இதை எந்த வீரராலும் எப்போதும் அடைய முடியாது. அதேநேரம் அவருடன் என்னை ஒப்பிட்டு பேச வேண்டாம் என்றார்.

## சீனா பக்கம் சாய்கின்ற...

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்களின் வடக்கு மாகாணத்தில் பலாலி, காரைநகர், மன்னார், ஆனையிறவு, தள்ளாடி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் இலங்கை அரசின் இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படைத் தளங்களை அமைத்துள்ளது. அந்த முகாம்கள் அங்கே அமைக்கவும், இராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகள் குடும்பங்கள் அங்கே தங்குவதற்குமான ஏற்பாடுகளை எல்லாம் சீனாதான் செய்து தருகிறது.

இதைப் பற்றி விவாதிக்க சீன இராணுவ அமைச்சர் லியாங் குவாங்லி என்பவர் இன்று (29.08.2012) இலங்கை வருகிறார். அப்போது உயர்மட்ட இராணுவப் பிரதிநிதிகளின் கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேலும் வருகின்ற செம்டெம்பர் 15ஆம் திகதியன்று சீன மக்கள் காங்கிரஸின் துணைத் தலைவர் யு பாங்கோ த்லைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்றும் இலங்கைக்கு வருகிறது. அந்தக் குழுவிலே 96 சீனப் பிரதிநிதிகள் இருப்பார்களாம்.

இந்தக் குழு இலங்கையில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து நேரில் பார்வையிட இருக்கிறார்களாம். இது மாத்திரமல்ல, இலங்கைக்கு சீனா 36 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 14 திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கிறது.

இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் துறையில் பணிபுரிபவர்களின் குழந்தைகளை படிக்க வைக்க 9 கோடி ரூபாய் செலவில் பள்ளிக்கூடம் ஒன்றை சீனா கட்டிக் கொடுத்திருக்கிறதாம்.

சீனாவிடமிருந்து 59 கோடி ரூபாய் செலவில் எம்.ஏ. 60 ரக பயணிகள் விமானம் வாங்கிட இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தியாவை விட 6 மடங்கு அதிகமான பல்வேறு உதவிகளை சீன நாடு இலங்கைக்கு செய்து கொடுத்திருக்கின்ற நிலையில் இந்தியா எதை நம்பி இன்னமும் இலங்கை நட்புநாடு என்று சொல்லிக் கொண்டிருக்கிறதோ? அதை ஒருதலை நட்பு என்றுதான் சொல்ல முடியுமே தவிர இருநாடுகளுக்கும் இடையிலான சுமுகமான நட்பு என்று எப்படிச் சொல்லமுடியும்?

இந்தியப் பிரதமர் உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு இராணுவ இணை அமைச்சர் பள்ளம் ராஜு தெரிவித்துள்ள கருத்தினை மறுபரிசீலனை செய்வதோடு நீலகிரி மாவட்டத்தில் பயிற்சி பெறும் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்பிடவும் மீண்டும் இப்படிப்பட்ட இராணுவப் பயிற்சிகள் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவிலே அளிப்பதை உறுதியாகத் தவிர்த்திடவும் வேண்டும் என்றும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-11)

## சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான ஆதரவுக் கூட்டம்

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் திவிநெகும அபிவிருத்தி திணைக்களமாக மாற்றமுறுவதை ஆதரிக்கும் கூட்டம் வீரசிங்கம் மாநாட்டு மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஏனைய சமுர்த்தி சார் உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கவுள்ளனர்.

மேலும் திணைக்கள மாற்றத்தை விரைந்து செயற்படுத்துமாறு கோரி யாழ்.மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களின் ஆதரவு நிலையினை வெளிப்படுத்தும் முகமாக ஒன்று கூடவுள்ளனர் என யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஏ.ரகுநாதன் தெரிவித்துள்ளார். (ந-8)

## மரண அறிவித்தல்

### திருமதி நமசிவாயம் கமலம்



கரவெட்டி கிழக்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமசிவாயம் கமலம் 28.08.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம்(ஆசிரியர்)அவர்களின் அன்பு மனைவியும், கமலக்கண்ணன் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), கமலநாதன் (கனடா), கல்யாணி (ஓய்வுபெற்ற ஹாட்லிக் கல்லூரி ஆசிரியை), கமலராணி (ஆசிரியை -யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்), மோகன் (ஜேர்மனி), ஞானகலை (கனடா), மன்மதன் (கனடா), வரதன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

காலஞ்சென்ற செல்வசோதி மற்றும் பவானிதேவி, ரதிதேவி, மயில்வாகனம், கௌரி, யுகேந்திரா, உமாமகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.08.2012 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் வேதக்களி இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
(ந.கமலக்கண்ணன்)

(சி-855)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து-சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்தும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் மல்லாகம் மதவடிப் பகுதியில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தெல்லிப்பழையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தரை மோதி விபத்துக்குள்ளானது.

இதில் சுன்னாகம் மயிலணி வடக்கைச் சேர்ந்த விசுவலிங்கம் சங்கர் (வயது 54) என்ற குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் தெல்லிப்பழை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு வரப்பட்டது. (ந-6)

## தகுதி தரா...

மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து இரத்தினபுரி நகர சபை விளையாட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ந-11)

# திருடப்பட்ட மோ.சைக்கிள் பொலிஸாரால் மீட்பு!

வடமராட்சியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றினை நேற்று ஊரெழு பகுதியில் வைத்து கோப்பாய் பொலிஸாரும், நெல்லியடிப் பொலிஸாரும் கைப்பற்றியுள்ளனர். வடமராட்சி விளையாட்டுக் கழகமொன்றின் உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டம் கடந்த 24-ம் திகதி இடம்பெற்ற போது இமையாணன் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரின் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டிருந்தது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஊரெழு பகுதியில் உள்ள வீட்டின் சமையல் அறையிலிருந்து பிரதேசவாசி கொடுத்த தகவல் அடிப்படையில் இவ் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. இதன்போது சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-24)

## இலங். இராணுவத்தி...

மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் பள்ளம் ராஜு கூறியதாக செய்திகள் வந்துள்ளன.

இது குறித்து அவரிடம் தொலைபேசியில் பேசினேன். நட்பு நாடுகளின் இராணுவத்துக்கு ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்தியாவில் பயிற்சியளிப்பது வழக்கமானது. சில நேரங்களில் மாநில அரசுகள் தெரிவிக்கும் கருத்துக்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும் முன்பு இலங்கை இராணுவ அதிகாரிகள் 9 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டபோது, தமிழக காங்கிரஸ் சார்பில் இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோனியிடம் முறையிட்டோம். அதனால் அவர்கள் வேறு மாநிலத்து அனுப்பப்பட்டார்கள்

அதற்காக நீலகிரியில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவத்தினரை திருப்பி அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய இணை அமைச்சர் பள்ளம் ராஜு நிராகரித்ததாக பொருள் கொள்ளக்கூடாது.

எப்படியாயினும் இலங்கை இராணுவ அதிகாரிகளை உடனடியாக திருப்பி அனுப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக இராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோனியிடம் பேச இருப்பதாக ஞானதேசிகன் தெரிவித்துள்ளார். (ந-11)

# தமிழர்களை அவமதிக்கும் வகை...

வருகிறது இலங்கை இனவாத அரசு. தங்களுடைய அரசியல் தன் உரிமைக்காக போராடிய தமிழர்களை பூண்டோடு அழித்தொழிக்க திட்டமிட்ட ஒரு இனப் படுகொலைப் போரைத் தொடுத்தது சிங்கள பௌத்த இனவாத அரசு.

அந்தப் படுகொலைப் போருக்கு எல்லா வகையிலும் உதவியது இந்திய மத்திய காங்கிரஸ் அரசு. பூர்வீக தமிழர்களை மட்டுமன்றி இலங்கையின் பொருளாதார வளமாக திகழும் தேயிலைத் தோட்டங்களில் உழைத்து அந்நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்திய இந்திய வம்சாவளி தமிழர்களை நாடற்றவர்களாக்கிய இலங்கை அரசு, 150 ஆண்டுகளாக அம் மண்ணில் உழைத்த இந்திய வம்சாவளி தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டு அகதிகளாக தமிழகத்திற்குத் திரும்பி, இன்றுவரை வேரற்ற மக்களாக பரிதாபத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இது மட்டுமன்றி கச்சைதீவை இந்திய மத்திய அரசு தாரை வார்த்ததற்குப் பிறகு 1977ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை இலங்கை கடற்படை நடத்திய தாக்குதல்களில் 546 தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பல ஆயிரக்கணக்கான மீனவர்கள் காயம் பட்டு உடல் உறுப்புக்களை இழந்து உழைக்கத் தகுதியற்றவர்களாகியுள்ளனர். இவ்வளவு கொடுமைகளை தமிழினத்திற்கெதிராக தொடர்ந்து இழைத்து வந்த இலங்கையின் இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி தொடரும் என்று இந்தியாவின் பாதுகாப்புத்துணை அமைச்சர் கூறுகிறார் என்றால் தமிழ் இனத்திற்கு எதிரான அந்நாட்டு அரசுகள் இழைத்த அனைத்துக் கொடுமைகளையும் இந்தியா ஆதரிக்கிறது என்றுதானே பொருள்.

இந்த நாட்டின் மீனவர்கள் 546 பேரை கொன்று குவித்த ஒரு நாட்டின் இராணுவத்திற்கு தொடர்ந்து பயிற்சி கொடுப்போம் என்று கூறுவார்களே ஆனால் இந்திய மீனவர்கள் மீதும் அந்நாட்டுதமிழினத்தின் மீதும் இலங்கை படைகள் நடத்திய, நடத்திவரும் தாக்குதல்கள் நியாயமானது என்பதுதான் இந்திய மத்திய அரசின் நிலையா என்று கேட்கின்றோம்.

தமிழ் இனத்திற்கு மட்டுமல்ல இந்திய நாட்டிற்கும் எதிராக இலங்கை அரசு செயற்பட்டுள்ளதா இல்லையா? 1963ஆம் ஆண்டில் நடந்த போரில் இலங்கை அரசு சீனாவின் பக்கம் நின்றது. 1965,71ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானுடன் நடந்த போரின் போது பாகிஸ்தான் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பிக் கொண்டு சென்று இந்திய நாட்டின் மீது தாக்குதல் நடத்த உதவியது இலங்கை அரசு.

இப்படிப்பட்ட வரலாற்றுப் பின்னணியிருந்தும் இலங்கையை நட்புநாடு என்று கூறுகிறார் மத்தியமைச்சர் பள்ளம் ராஜு. இந்தியாவின் நலனுக்கு எதிராக இருக்கும் நாடுதான் நட்புநாடா? இப்போது கூட இந்தியா தனது எதிரி நாடாக கருதும் சீனாவிடம் நெருக்கமாக சென்று கொண்டிருக்கிறது இலங்கை.

இலங்கையின் நட்பை பெற இந்தியா தூக்கிக் கொடுத்த கச்சதீவில் சீனாவின் இராணுவ நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை கச்ச தீவில் நடந்த அந்தோனியார் விழாவிற்குச் சென்ற தமிழர்கள் அனைவரும் பார்த்து விட்டுவந்துள்ளனர்.

ஆனால் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் இலங்கையை நட்புநாடு என்கிறார். எந்த அடிப்படையில் இலங்கை இந்தியாவின் நட்பு நாடு? யாருக்கும் புரியவில்லை.

இலங்கை நட்பு நாடு என்றால் தமிழ்நாடும் தமிழர்களும் இந்திய நாட்டின் எதிரிகளா? என்று கேட்கிறோம். இந்த நாட்டின் மீனவர்களை பல நூற்றுக்கணக்கில் கொன்று குவித்தது இந்த நாட்டின் இறையாண்மையை அவமதிக்கும் நடவடிக்கையல்லவா? தமிழர்கள் நலன் பற்றி பேசினாலே இறையாண்மைக்கு எதிரான பேச்சு என்று கூப்பாடு போடும் காங்கிரஸ் காரர்கள் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கொல்லும் போது அது இறையாண்மையை மீறிவிட்டது என்று ஒரு போதும் கண்டிக்காதது ஏன்? இறையாண்மை என்பது ஒரு நாட்டின் மண்ணையும் மக்களையும் காப்பதற்கான அந்நாட்டு அரசுக்கு உரிய உயர்ந்த தார்மீக உரிமையல்லவா? அது ஏன் தமிழ்நாட்டின் மீனவன் கொல்லப்படும் போதும் தாக்கப்படும் போதும் அமைதியாகி விடுகிறது என்பதே நாம் தமிழர் கட்சி எழுப்பும் கேள்வியாகும்.

இந்திய மத்திய அரசு தனது நட்பு நாடு என்று இன்று பறைசாற்றும் இலங்கை, உண்மையில் சீனத்தின் நட்பு நாடாக ஆவதையும் தனது எதிரி நாடாக நின்று இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக ஆகப்போவதையும் இந்தியா பார்க்கத்தான் போகிறது என சீமான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ந-11)

## பரிவர்த்தனை...

பங்குச் சந்தை முறைகேடுகள் தொடர்பாக விசாரிக்கப்படுவர்களின் அழுத்தங்களுக்கு தான் உட்பட்டிருந்தாக திலக் கருணாரட்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## ஐரோப்பிய...

உள்ளிட்ட பிர்திநிதிகளுக்கும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த உறுதி மொழி அளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் முகவர் நிறுவனங்களான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், யுனிசெப் உள்ளிட்ட சிலவற்றின் ஊடாக இந்த உதவிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. (ந-11)

## விவசாயிகளி...

அடகு வைக்கப்பட்ட பொருட்களுக்கு 2012-2013 மகாபோக அறுவடை வரை வட்டி அறவிடுவதை இடைநிறுத்துமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (ந-11)

## ஜனாதிபதி...

கொண்ட உயர்மட்டக் குழு வொன்றும் ஈரான் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பெற்றோலியத் துறை அமைச்சர் மற்றும் வர்த்தகக்குழு, ஊடகவியலாளர்கள் ஆகியோர் இடம் பெறவுள்ளதாக கொழும்பிலுள்ள ஈரானிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரான் வரும் இலங்கை ஜனாதிபதி, ஈரானிய அதிபரை சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்துப் பேசக் கூடும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-11)

## இலங்கை...

இராணுவ சேவை, தேசிய பாதுகாப்புச் சேவை, நேட்டோ படையணி போன்றவற்றின் இராணுவ விமானிப் பதக்கங்களை சுரேஸ் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுரேஸ் 2007 ஆம் ஆண்டு அமெரிக்க விமானப்படையில் இணைந்து கொண்டதாகவும், 2009 ஆம் ஆண்டு முதல் பிளக் கொக் ஹெலி கொப்டர் விமானியாக கடமையாற்றிவந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

29 வயதான சுரேஸ் ஆப்கானிஸ்தான் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்துள்ளார். (ந-11)

## பதியத்தலா...

பாதிப்புக்கள் எவையும் ஏற்படவில்லை என புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.பி.விஜயானந்த தெரிவித்தார். (ந-11)

## அவுஸ்.செல்...

களும் 22 சிங்கள பிரஜைகளும் இருந்ததாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

சிலாபத்திலிருந்து 20 கடல்மைல் தொலைவில் வைத்து இவர்கள் அனைவரும் கைதாகினர் ஒரு பெண் அடங்கலாக அனைவரும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, சிலாபம், புத்தளம், கொழும்பு, நீர்கொழும்பு, குருநாகல் மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட அனைவரும் முகத்துவாரம், மீன்பிடித்துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு, குற்றவிசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-11)

## செங்கல்பட்டு முகா...

டிஸ்கி முகமது உள்ளிட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள்தங்களை விடுவிக்கக் கோரி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் இவர்களின் உடல் நிலை பாதிக்கப்பட்டது.

இவர்களில் செந்தூரனின் நிலை கவலைக்கிடமானது. இதையடுத்து அவரை மருத்துவ மனை சேர்த்துள்ளனர்.

இந்த அகதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, நாம் தமிழர் தலைவர் சீமான், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் உள்ளிட்டோர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

மேலும் தொடர் போராட்டங்களும் நடத்தப்பட்டன. செந்தூரனை வைகோ நேரில் சென்று பார்த்தார். மேலும் ம.தி.மு.க. தலைமைக் கழக அலுவலகத்தில் தொடர் உண்ணா விரதப் போராட்டமும் தொடங்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது 7 அகதிகளை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. கியூ பிரிவு பொலிஸாரின் பரிந்துரைப்படி இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். (ந-11)

வீடும் காணியும் விற்பனைக்கு
ஆதியாமலை உடுப்பிட்டியில் 3/4 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0778421209 சுதாகர்
(301)

Mathavaa Studio
உங்கள் இல்லத்து சகல மங்கள நிகழ்ச்சிகளை உயர் தொழில்நுட்ப நவீன முறையில் ஒளிப் பதிவு செய்து Video Blu-ray அல்லது DVD இல் கொடுக்கப்படும். Photo நேர்த்தியான, அழகான முறையில் வடிவமைக்கப்பட்டு தற்கால நவீன முறையிலான அல்பம் செய்து தரப்படும். Video Hd முறையிலும் செய்து கொடுக்கப்படும். (299) தொடர்பு : 0770229942

A/L பரீட்சை முடியப்போகுது
என்ன செய்யலாம்?
கவலையை விடுங்கள்........
உலக தரம் வாய்ந்த நிறுவனங்களில் அதி உயர் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான விசேட பயிற்சி பட்டறை.
எதிர்வரும் 1ம் 2ம் திகதிகளில் நடைபெறும்
அனுமதி இலவசம்.
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் உள்வாங்கப்படுவதினால் அனுமதிக்கு முந்துங்கள்.
SMS ஊடாக பதிவுகளை மேற்கொள்ளவும்.
Name <Space> ID No <> Send
(சி-852) 0710 920 920
இடம்: அகவொளி குடும்பவளதுணை நிலையம், சென் பற்றிக் றோட், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org